திருவருள் துணை

# கூட்டு வழிபாடு




10985

## திருமுருக கிருபானந்தவாரி


திருப்புகழமிர்தம் அச்சகம்
N. 144, ... நாயகன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2

உ

முருகா

திருவருள் துணை

# கூட்டு வழிபாடு

★

அருள்மொழியரசு

திருமுருக. கிருபானந்தவாரி அவர்கள்

பார்வையிட்டது.

★

அன்பன் மூ. பெருமாள் எழுதியது.

★

1954

[பதிப்புரிமையுடையது]

முதற்பதிப்பு: 1954.

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| இறை வழிபாடு | 1 |
| கூட்டு வழிபாடு | 11 |
| வேண்டுதலற்ற வழிபாடு | 20 |
| கூட்டு வழிபாடு முறைகள் | 22 |
| தனிவழிபாட்டுப் பாடல்கள் | 27 |
| திருக்கோயில் வழிபாட்டுப் பாடல்கள் | 41 |
| கூட்டு வழிபாட்டுப் பாடல்கள் | 51 |


திருப்புகழமிர்தம் அச்சகம்,

144, சாமிநாயகன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

உ

முருகா

# முன்னுரை

உயர்ந்த பிறவியெடுத்த மக்களாகிய நாம் பெற்ற வாழ்நாட்கள் ஒவ்வொன்ருகக் கழிந்த வண்ணமிருக்கின்றன. தினந் தினம் காலையில் தேதி காலண்டரில் ஒவ்வொரு தாளாக நாம் கிழித்தெறிவது போன்று, நமனும் நம் வாழ்நாளின் தேதியைக் கிழித்த வண்ணமாக யிருக்கின்ருன்; என்பதை அதுபோழ்து நம்மில் யாரேனும் நினைவு கொள்கின்ருேமா? சிந்தித்து இனிச் செல்ல இருக்கின்ற நாட்களையாவது இறைவழிபாட்டில் நாம் செலவழிக்க வேண்டாமா?

இரை தேடுவதோடு இறையுந்தேடவேண்டுவது மனிதப் பண்பாகும். எனவே இறை வழிபாடு மக்களின் இன்றியமையாத கடமையாகும். அக்கடமையை ஒவ்வொரு நாளும் செய்யவேண்டும். அத்துடன் வாரத்துக்கு ஒரு நாள் அன்பர்கள் அனைவரும் ஒன்று கூடி இறைவனை வழிபடுவது மிகச் சிறந்ததாகும். அதற்குப் பலன் விழுமியது. இதனையே வார வழிபாடு அல்லது கூட்டு வழிபாடு என்றும் கூறப்படும். இவைகளை இந்நூல் மிகவுந் தெளிவாகவும், சுருக்கமாகவும் விளக்குவதுடன், வழிபாட்டு முறைகளையும், தனி வழிபாட்டுப் பாடல்கள், திருக்கோயில் வழிபாட்டுப் பாடல்கள், கூட்டு வழிபாட்டுப் பாடல்கள் முதலியவைகளையும் முறையாக தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.

வார வழிபாட்டுக்கு இந்நூல் மிகவும் சிறந்த துணை நூலாகும். இதனை எழுதிய எனது உழுவலன்பர் திரு. மு. பெருமாள் அவர்களின் முயற்சி சாலச் சிறந்ததாகும். எனவே மெய்யன்பர்கள் அனைவரும் இதனை ஓதி, என்று மகலாத இளமைக்காரன் இன்னருளால் இருமை நலனும் பெற்று உய்வார்களாக.

சென்னை,
1—1—1954

அன்பன்,
கிருபானந்தவாரி

உ

முருகா

# பதிப்புரை

இறைவழிபாடு யாவரும் நித்தமும் ஆற்றவேண்டிய முக்கியக் கடனாகும். அதை ஆற்றவேண்டிய அவசியமும், அவ்வழிபாட்டில் ஒவ்வொருவரும் இல்லத்தில் தனியாக ஆற்றவேண்டிய வகைகளையும், திருக்கோயில் சென்று வழிபாடு செய்யவேண்டிய வழிமுறைகளையும், வார வழிபாடான கூட்டு வழிபாடு முறைகளையும் முறையாக விளக்கப்பட்டுள்ளன இந்நூலில். அதற்கு வேண்டப்படும் ஆன்றோர்களது அரியபாடல்களை வகுத்தும் தொகுத்தும் இந்நூல் உருப்பெற்று அன்பர்கள் முன் வருகின்றது.

அவரவர் வாழ தனிவழிபாடும், சமயம் வளர திருக்கோயில் வழிபாடும், நாடெங்கும் வாழ கூட்டு வழிபாடும் பயன்படும். ஆகவே எல்லாவற்றிலும் சிறந்த கூட்டு வழிபாடு இந்துக்களாகிய நம்மவர்க்கு மிகமிக அவசியமான தேவையாகும். எனவே இந்த நல்ல குறிக்கோளைத் தூண்டவும், எங்கும் கூட்டு வழிபாடு வளரவும் இந்நூல் சிறந்த துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. சைவ வைணவ இருபாலார்க்கும் பயன்படும் முறையில் பாடல்கள் இந்நூலில் சேர்த்துப் பதிப்பித்துள்ளனம். யாவரும் பெற்று பயனடைவார்களாக.

இந்நூல் சிறப்பாக வெளிவர கருணை கூர்ந்து, ஆசீர்வதித்து, முன்னுரை வரைந்து முழு ஆதரவுந் தந்த முத்தமிழ் மூதறிஞர் அருள்மொழியரசு திருமுருக. **கிருபானந்த வாரியார்** அவர்களின் கைம்மாறு கருதா கருணைக்கு அடியேன் வணக்கஞ் செலுத்துகின்றனன். இந்நூல் எழுத அடியேனை ஊக்கிய ஆருயிரனைய அன்பர் உயர்திரு. திருமாமணூளசிவம் அவர்கட்கும், விரைவில் சிறப்புடன் வெளிவர அரும்பாடுபட்டு ஒத்துழைத்தஅன்பர் திருமிகு. து. கோதண்டபாணி அவர்கட்கும், இதில் கூட்டு வழிபாட்டுப் படத்தைப் பிரசுரிக்க உதவிய சென்னை திருவருள் தவநெறி மன்ற அன்பர்கட்கும் அடியேனது நன்றியறிதலான வணக்கம் உரியதாகுக. வணக்கம்.

சென்னை,
1—1—1954

அன்பன்,
**மு. பெருமாள்**




சென்னை திருவருள் தவநெறி மன்ற கூட்டு வழிபாட்டில் அருள்மொழியரசு திருமுருக. **கிருபானந்தவாரி**
அவர்கள் நல்லுரை ஆற்றும் ஓர் அரிய காட்சி.

உ

திருவருள் துணை.

# கூட்டு வழிபாடு

—— : ——

## 1. இறை வழிபாடு

உலகில் வாழும் பலவகைப் பிறவிகளில் மிக உயர்ந்தது மக்கள் பிறவியே யாகும். "அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என ஆன்றோர் மெய்வாக்கு அறிவிக்கின்றது. இந்த உலகில் யானை முதல் எறும்பீராக வாழுகின்ற உயிரினங்களைக் காணும்போது இந்த உண்மை தெளிவாக விளங்குகின்றது. எனவே எல்லாப் பிறவிகளிலும் மக்கள் பிறவிதான் சிகரம் போன்றதாகும்.

எனவே இத்தகைய மேலான மக்கள் பிறவி ஒரு உயிருக்கு எடுத்தவுடனே வாய்க்காது. பலவகைப் பிறவிகளைப்படிப்படியாகத் தாங்கி நல்வினையைப்பெருக்கியதின் காரணமாகத்தான், மிக மேலான மக்கள் பிறவி வந்து வாய்க்கும். வித்து விதைக்கும்போதே மரமாகிக் காட்சியளிக்காதல்லவா? முதலில் முளைவிட்டு, பின்னர் செடியாகி, கிளைவிட்டு, இலைவிட்டுப் பூத்துக் காயாகிக் கனியாகக் குலுங்கி விளங்கும் காட்சியை நாளடைவில் தானே காணமுடிகின்றது.

இதே போன்றுதான் உயிர்கட்குப் பிறவி வகைகள் படிப்படியாய் முறையாக வகுக்கப்பட்டுள்ளன. இந்த உண்மைக்கு ஆதாரம் வேண்டுமா? இதோ பெருவாசகமாம் திருவாசகம் பேசுகின்ற பின் வரும் எழிலான பாடலைப் பாருங்கள்.

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்............................"

உயிர்களின் உற்பத்திப் பிறவியைப் பேச வந்த மணி வாசகப் பெரியார் ஏன் எடுத்த எடுப்பிலேயே“மனிதராய்த் தேவராய், என்னுது புல்லாகிப் பூடாய் எனப் பேசியுள்ளா ரெனின் அஃது இயற்கைக்கு மாருன முறையாகும். உள்ளதைத்தானே உபதேசிக்க வேண்டும்? எனவே ஒரு உயிர்க்குப் பலபிறவிகளின் புண்ணியத் தொகுப்பால்தான் மனிதப் பிறவி வாய்க்கும் என்பது விளங்குகின்றதன்ருே! காரணம் மனித அறிவுக்குத்தான், தன்னை அறியவும், தனக்கு ஆதாரமான தலைவனை (இறைவனை) உணரவும், அந்த நல்லுணர்வால் வரும் அறப் பயன்களை, அகில மெலாம் பரவச் செய்து, ஆருயிர்கள் உய்ய அமைதியான வழிவகைகளை உருவாக்கவும்,அதனுல் தன்பிறவிப் பயனை புண்ணியமாக மாற்றியமைக்கும் பேரறிவும், பேராற்றலும் பெறும் வாய்ப்பு மனிதப் பிறவிக்குத்தான் உண்டு. இஃது ஏனைய பிறவிகட்கு அமைக்கப்படாத ஏற்றமான வாய்ப் பாகும் மனிதப் பிறவிக்கு. மனிதப் பிறவி எடுத்தபின் மீண்டும் மனிதப் பிறவியே வாய்க்கும் என்பது நிச்சய மில்லை. தீய வினைகள் பல ஆற்றினுல் தாழ்ந்த பிறவியை மீண்டும் தாங்கநேரும். இதனுல்தான் அதே மணிவாசகம் ‘மனிதராய்’ என்றதற்குப் பின்னர் ‘பேயாய்க்கணங்களாய்’ என்றும் பேசுகின்றது. எனவே ஒவ்வொரு உயிர்களும் தந்தம் இருவினைகட்கு ஏற்ப ஏற்றத் தாழ்வான பிறவிகளை எய்துகின்றன.

இங்ஙனம் உயிர்கள் ஏன் பிறவிகளில் உழன்று துன் புறவேண்டும்? எல்லாவற்றையும் படைத்து இயக்குபவன் இறைவன் எனப் பேசப்படுகின்றதே? ஏன் அந்த இறை வன் எல்லா உயிர்களையும் சமமான இன்ப வாழ்வில் இயங்கவைக்கக் கூடாது என்ற கேள்வி இந்நாளில் எங்கும் எழுகின்றதன்ருே?.

நெல் என்று உண்டோ அன்றே அதனிடை முளையும், தவிடும், உமியும் உண்டு. இம் மூன்றுங் கலந்த ஒன்றே நெல்லாகப் பரிணமிக்கின்றது. அஃதே போன்று உயிர் கட்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் இயற்கை யாகவே கலந்துள்ளன. எனவே மும் மலங்களின் காரண மாக அதன் வயப்பட்ட உயிர்கள், சிந்தனையாலும், வாக்

காலும், உடலாலும், செயலாலும் ஆற்றுங் கன்மங் காரணமாக இன்ப துன்பங்களை நுகர்கின்றன. இங்ஙனம் உயிர்கள் மும் மலங்களால் உடலும் ஊழும் பெற்று, பிறவித் தளையை வளர்த்து, பிறப்பதும் இறப்பதுமாக மாறி மாறி உழன்ற வண்ணமிருக்கின்றன. இறைவன் எல்லா உயிர்கட்கும் சரிசமமான அறிவாற்றலை வழங்கி யிருந்தும், உயிர்கள் அவைகளைப் பயன்படுத்தாது இரு வினையிற் சிக்கி உழல்கின்றன. இந்நிலையைப் பதிபசு பாச விளக்கம் பின் வரும் பாடலில் பேசுந் தன்மையை உணர்வோமாக.

ஊழ்வினை யாலு டம்பு முடம்பினு லூழு மாகித்
தாழ்வினை யிரண்டாய் மூன்ருய்ச் சதுர் விதமாகி யோங்கி
வாழ்வொடு வறுமை யாகி மன்னுயிர் தொறும் வதிந்து
காழ்மரம் விதையும் போலாங் கன்மஙீ கண்டு கொள்ளே.

இங்ஙனம் மும்மலங்களின் காரணமாக உயிர்கள் இரு வினையிற் சிக்கி, பிறவிப் பிணியில் மாறிமாறி மடிந்துழல் வதைத் தாயுமான தவப் பெரியார், பெரிதும் வருந்திப் பின்வரும் பாடலில் பகர்வதைப் பாருங்கள்.

சிவன் செய லாலே யாதும் வருமெனத் தேறே ஞுரு
மவந்தரு நினைவை யெல்லா மகற்றிலே ஞசை வெள்ளங்
கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக் கட்டிலே யகப்பட் டையோ
பவந்தனை யீட்டி யீட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே.

ஒரு பிறவியில் ஒரு உயிர் கருவில் உற்றது முதல், பிறந்து வளர்ந்து வாழ்ந்து மறைகின்றவரையில் படும் அல்லல் அளவற்றதாகும். பல பிறவிகளின் துன்பங்களை எண்ணுகையில் பகீரென பதைக்கின்றது நெஞ்சம். உண்மையை உணராத குறையால் உயிர்கள் உலக ஆசையிற் சிக்கி, ஊழைப் பெருக்கிக்கொண்டே யிருப்பின் ஓய்ந்து உய்யும் நாள் என்று? மாயை என்னும் மறதியால் பல் பிறவிகள் எடுத்துப் படும் துன்பங்களை உயிர்களாகிய நாம் எண்ணிப் பார்த்து வருந்த வேண்டாமா? வருந்தி பிறவித்தளையிலிருந்து விடுபட வழிதேட வேண்டாமா? வினைப்பயனுல் வரும் தேகத்தை வேரறக் களையவேண் டாமா? பிறப்பிலும் இறப்பிலும் சலிப்படைய வேண்டாமா?

பிறவிப்பிணி பெருந் துன்பக்குவியலாயிற்றே! ஒரு துளி இன்பங் காரணமாக பெருங்கடலனைய பிறவிப் பிணியிற் பட்டுழல்வது அறிவுடைமையாகுமா?

"வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை"

என வாதவூரடிகளார் வருந்தி விண்ணப்பித்துள்ளதை நாம் சிந்திக்க வேண்டும்.

"ஈனமிகுத் துளபிறவி யணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞான அருட் டனையருளி வினைதீர
நாண மகற்றிய கருணை புரிவாயே!"

என அருணகிரிநாத அடிகளார் பிறவியின் ஈனத்தனத்தை எண்ணி இறைவனருளை நாடியுள்ளார்! எனவே இப்பிறவித்தளையிலிருந்து விடுபட ஏதேனும் வழியுண்டா எனின்? உண்டு. அதுதான் இறை வழிபாட்டில் ஈடுபடுதல். இறைவழிபாட்டில் ஈடுபடுதல்தான் நம் இன்றியமையாக் கடனென எண்ணில் பெரியோர்கள் இயம்பி வழி காட்டியுள்ளனர்.

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம்பி ரான்கழல் போற்றுது நாமடியோஞ்
செய்வினை வந்தெமை தீண்டப் பெறுதிரு நீலகண்டமே.

என வருந் தேவாரத் திருவாக்கை எண்ணித் தேர்வீர்களாக. மும்மலங்களும் மற்றும் எம்மலங்களும் கடந்த எந்த ஒரு எல்லாம் வல்ல இறைவனுண்டோ அப்பெருமானை நாடிவழிபட்டாலன்றி; வினைப்பிறவியிலிருந்து நாம் விடுதலையடைய வியலாது. பல்லுயிர்கட்கும் பெருந்துணையாய் நிற்கும் பெருமானைப் பணிந்தேற்றுவார், பெருங்கடலுக் கொப்பான பிறவி யென்னுஞ் சாகரத்தை நீந்திப் பெருவாழ்வு பெற்றின்புறுவார். இறையருளை நாடி இறைஞ்சாதார், என்றும் பிறவிக்கடலில் அழுந்தி எண்ணற்ற இன்னல்களில் இயங்க வேண்டியதுதான்.

இவர்கட்கு உய்ய வழியேயில்லை. இதற்கு விளக்கம் வேண்டுமா! இதோ கவனியுங்கள் நம் தமிழ் மறைத் திரு வாக்கை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

அதென்ன இறைவனை வணங்கினால் தான் நம் பிறவிப் பிணி நீங்குமோ? ஏன் நாமே முயன்று அதை நிவர்த்தி செய்து கொள்ள இயலாதா? எனின், அது இயலவே இயலாது. இதுகாறும் நிகழ்ந்ததில்லை. இனியும் நிகழப்போவதில்லை. காரணம் இறைவன் ஒருவனைத் தவிர மற்ற ஏனைய உயிர்களாகிய நாம் எத்துணை மகத்தான ஆற்றல் வாய்ந்தவராயினும் மும்மலங்களின் தொடர்பு உடையவர்களாவோம். எனவே நம்மைப் பிறப்பு இறப்பு என்னும் பிணி பற்றியுள்ளது. நாமாக இயங்கும் சத்தியை நமக்கு இறைவன் வைக்கவில்லை. அளிக்கவுமில்லை. இறைவனே யாவையும் இயக்கும் மலமற்ற நிர்மலன். மின்சார நிலையத்தில் நிறைந்துள்ள சக்தி (பவர்) போன்ற வன் இறைவன். உயிர்களாகிய நாம் அச்சக்தியிலிருந்து உந்தப்படும் விளக்குகள், விசிறிகள் போன்றவர்கள். எனவே மூலசக்தியின் தொடர்பில்லாமல் மின்சார விளக்குகள் எங்ஙனம் பிரகாசிக்கும்.

துணிக்கு வெளுக்கும் குணமுண்டு. ஆயின் அது தானாகவே வெளுக்காது. சவுக்காரத்தின் தொடர்பு சேர்ந் தால்தான் தூய்மையாக வெளுக்க முடியும். அதுபோல் உயிர்களாகிய நம்முடைய நிலைமையிருக்கின்றது. அதோடு "நாம்" அல்லது "நான்" என்று கருதியுள் ளோமே அந்த "நான் யார்" என்ற கேள்வியை ஒவ்வொரு வரும் தங்கட்குள்ளாகவே ஆராய்ந்து பார்ப்பின், உண்மையை அந்த ஆராய்ச்சி அறிவிக்கும். எத்துறை யில் எவ்வகை ஆராய்ச்சி செய்துபார்ப்பினும், இறுதியாக நிற்பது இறைவன் சக்தி ஒன்றேதான். அவனுக்கு அன்னியமாக வேறு ஒன்றையும் காணமுடியவில்லை. எங்ஙனம் பெற்றோர் இல்லாது பிள்ளை யில்லையோ அங்ங னமே இறைவனில்லாது உயிர்களில்லை. (நாமில்லை).

எனவே நாமாகப் பிறவிப் பிணியை இறைவன் அருளில்லாது நீக்கிக்கொள்ள இயலாது. அறிவின் சிகரமாய் விளங்கியவர்கள், ஆராய்ச்சியில் சிறந்த மேதைகள், ஞானத்தின் கருவூலமாய்த் திகழ்ந்தவர்கள், சிவ வாழ்வையே தவவாழ்வாகக் கொண்ட சிறந்த மகரிஷிகள், சகல கலைகளும் நிறைந்த சகல கலா வல்லுனர்கள், அட்ட சித்திகளும் பெற்ற அருந்தவ முனிவர்கள், உலகம் உய்ய உயர்ந்த வழிகளை நிறுவிய உத்தம மகான்கள், சன் மார்க்கம் வகுத்த சான்றோர்கள், சமயம் விளக்க அவ தரித்த சற்குருமார்கள், கலை இலக்கியத்தை உருவாக்கி உயிர்ப்பித்த கவிஞர் பெருமக்கள், மற்றும் இவ்வுலக மக்கள் முன்னேற்ற மடைய எல்லாத் துறைகளிலும் வழிவகுத்துக் காட்டிய வீரர்கள் முதல், எல்லா நம் ஆன் றோர்களும் இறைவனை வழிபட்டு, அவரது அருள் தொடர்பினாலேயே எலலா இன்னல்களையும், இறுதியாகப் பிறவிப்பிணியையும் கடந்ததாக அவர்தம் வரலாறுகள் பேசுகின்றன. அவர்களது சிறந்த அநுபவம் நமக்குப் பெருத்த பொற்குவியலல்லவா? அவர்கள் பிறந்த மண்ணில், அவர்கள் வளர்ந்த நாட்டில், அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தில், அவர்கள் நிறுவிய சமயத்தில், அவர்கள் வணங்கிய இறைவழிபாட்டில், அவர்கள் உரு வாக்கிய உயர்ந்த பண்பாட்டில், அவர்கள் செப்பனிட்ட வாழ்க்கைப் பாதையில் உருவாகி, அவர்கள் வழிவந்த சந்ததிகளான நாம், அவர்கள் தேடிவைத்த பொற்குவிய லென்னும் அறிவு நிறைந்த அநுபவத்தை, நம்பி பின் பற்றவேண்டுமல்லவா? ஆகவே அவர்களது அற நூல் களை அருந்துணையாகக் கொண்டு இறை வழிபாட்டை மேற்கொண்டு ஈடேற்றம் பெறுவோமாக.

இறைவனை நாம் வணங்கி வழிபடக் கடமைப்பட்ட வர்கள் என்பதையும் அறியவேண்டும். இறைவனை நாம் வணங்குவதால் அவருக்கு ஒரு நன்மையும் உண்டாகப் போவதில்லை. அல்லது அவருக்கு புகழையோ பெருமை யையோ நம்முடைய வழிபாட்டால் உண்டாக்கிவிட முடி யாது. நம்முடைய வாழ்த்துதலிலும் வழிபாட்டிலும் அவரது பெருமையும், புகழும அடங்கி நிற்கவில்லை. அல்லது அதை உயர்த்தவும் நம்மால் முடியாது. வேண்டு

தல் வேண்டாமை யற்ற விமலனுக்கு நம்மிடமிருந்து வேண்டுவது என்ன இருக்கமுடியும்? பொன்னை அணிபவர்கள் பிரகாசம் பெறுகின்றனர். அதனால் பொன்னுக்குப் பயன் என்ன? அல்லது அணிபவர்களால் தான் அது பிரகாசம் பெறுகின்றதா? அணிபவர்களால் அதற்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. அது இயற்கையாகவே பிரகாசமுள்ளது. பிரகாசத்துக்காக பொன் யாரையும் எதிர்ப்பார்க்கவேண்டியதில்லை யல்லவா? பிரகாசமும் அழகும் பெறவேண்டுமாயின் அஃதைச் சார்ந்தவர்கட்குப் பொன் அளிக்கும். ஆயின் அதனால் அதற்கொன்றும் பயனில்லை.

அஃதே போன்று இறைவனை வணங்குவதால் நாம் நன்மை யடைவோமே ஒழிய, இறைவனுக்கு ஒரு நன்மையுமில்லை. துன்பச் சகதியாம் பிறவியில் துயரமுறும் நாம் இன்பம் பெறவேண்டுமாயின், பேரின்பத்தின் இருப்பிடமாம் பெருமானைச் சார்ந்து வழிபடுதல் வேண்டும். கடவுளை நம்பினாலும் நம்பாவிட்டாலும், ஆத்திகராயினும் சரி அல்லது நாத்திகராயினும் சரி எல்லா உயிர்கட்கும் இறுதியான துணை இறைவன் இணையடியே.

ஒரு பஸ்ஸில் ஏறுகின்றோம். இடம் நெருக்கடி. நிற்க வேண்டி வந்துவிட்டது. நாம் படும் சிரமத்தைப் பார்த்து அங்கு உட்கார்ந்திருந்த அன்பர் ஒருவர் இரக்கப்பட்டு தான் எழுந்து ஐயா! இங்கே அமருங்கள் என்று இடம் கொடுக்கிறார். உபகாரம் என்னமோ அற்பந்தான் இருந்தாலும், நாம் அவரை வாயார மனமார வாழ்த்தி நன்றி சொல்லுகின்றோமல்லவா? பின்னர் அவரைக் காணும்போதெல்லாம் உபசரித்து நன்றி கூறுகின்றோமல்லவா? சிறிது நேரப் பிரயாணத்தில் செய்த உபகாரத்துக்குச் செய்த நன்றி மறவாமல் நன்றி கூறும் நாம், நமது நீண்டகால வாழ்க்கைப் பிரயாணத்துக்கு நலம் பல செய்து உதவி யளித்த இறைவனை, வாழ்த்தி வணங்கக் கடமைப்பட்டிருக்கவில்லையா? மண்ணில் விளையும் சக்தியில்லையேல் நமக்கு உணவு ஏது? அருந்த நீரில்லையேல் நம் கதி யென்னவாகும்? சுவாசிக்கக் காற்றில்லையேல் நாம் உயிர்வாழ முடியுமா? நாம் உலவ சூரிய சந்திர ஒளி

யில்லையேல் கண்ணிருந்தும் குருடராக அன்றோ வாழமுடியும்? நமக்கு உணவாதிகளைப் பக்குவப்படுத்தி யளிக்க நெருப்பில்லையேல் என்னுவது? வான வெளி விரிந்து நின்று மேக மண்டலத்தைப் பரவிச் செல்ல வாய்ப்பில்லையேல் எங்கும் மழை வியாபிக்குமா?

ஆக இவை அனைத்தையும் நாமா நடத்திவைக்கின்றோம்? அல்லது கூட்டுறவுக்கழகம் அமைத்து அவைகளை இயக்க முடியுமா? அல்லது நகரசபையா நடத்திவைக்கின்றது? அரசாங்கந்தான் அவைகள் இயங்க ஏற்பாடு செய்துள்ளதா? அல்லது விஞ்ஞானியாவது அவைகளை இயக்கிவைக்க முடியுமா? இயற்கை என்றாலும் அவை இயங்க ஒரு மூல சக்தி வேண்டாமா? ஆளில்லாமல் ஓடும் விமானத்தைக் கூட ஆரம்பத்தில் ஒருவர் இயக்கிவிட்ட பின்னர்தானே அது ஓடமுடியும்? அந்த ஐந்து சக்திகளின் இணைப்பால்தான் நம் உடல் கூட அமைந்துள்ளது. எனவே இவைகளை அமைத்து அளித்து இயக்கி உதவுபவன் யார்? அந்த ஒப்பற்ற (டிரைவர்)இயக்குபவன்தான் இறைவன். வண்டியின் உள்ளே டிரைவர் அமர்ந்து ஓட்டுவது போன்று, இறைவன் அவைகளின் உட்புகுந்து யாவையும் இயங்க வைக்கின்றான். ஆகவே கைம்மாறு கருதாது நமக்கு வாழ்க்கை வசதிகளை அமைத்து ஆட்கொள்ளும் ஆண்டவனுக்கு நாம் நன்றியான வணக்கம் கூறவேண்டியது கடமை யல்லவா?

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என தமிழ்த் திருமறை இயம்புகின்றதை நாம் சிந்தித்தால் இறைவனை வணங்கவேண்டியதின் அவசியமும் கடமையும் விளங்கும்.

ஒப்பற்ற குபேரசம்பத்து உடைய செல்வர்களாயிருப்பினும், புவியெலாம் போற்றும் நிகரில்லாத புலவர் பெருமக்களாயினும், பின்னர் அரசபதவி முதலான பெருமைமிக்க பதவிகள் உள்ளவர்களாயிருப்பினும்,

இறைவனை வணங்காதவர்களாயின், அவர்கள் வாழ்க்கை பிணத்துக்கு ஒப்பானதாகும் என்று பாரதியார் பேசுகின்றார்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே!

நாத்திக நெறியினரால் அவர்தம் வயப்பட்டு, பின்னர் பெருமானருளால் ஆத்திகரான திருநாவுக்கரசரெனுந் தெய்வீகப் பெருந்தகையார், பெருமானே! உம்மைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கிவிட்டேனே! என்று வருந்தி வழிபடுகின்றார்.

ஐயோ! நெஞ்சமே! மாநில மயக்க வாழ்வில் சிக்கி இது ஒரு வாழ்வு என்று நம்பி வாழ்கின்றாயே! இந்த பந்த வாழ்வில் வரும் பாவமூட்டையின் பாரத்தைத் தாங்கமுடியாமல் பரதவிக்கின்றாயே? இப் பிறவித் துன்பங்களிலிருந்து மீட்டு ஈடேற்றமளிக்கும் இறைவனை வணங்கி ஏற்றாதே, மேலும் மேலும் உனக்கு நீயே துன்ப வாழ்வைப் பெருக்கிக் கொண்டு பெருந் துன்பசாகரத்தில் அழுந்துகின்றாயே? என வாட்டம் மிக வுற்ற வாதவூரடிகளார் இறைவனை வணங்காத நெஞ்சத்துக்கு எச்சரிக்கை விடுக்கின்றார் பின் வரும் பாடலில்;

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே!

பெருங்கருணைப் பெருமானே! உம்மை முன்பிறவியில் வணங்காத தலை அதோ வீதியில் விறகுச் சுமை தாங்கி அலையப் பார்க்கின்றேன். உம்மை வாழ்த்தாத வாய் உணவின்றி பேசும் ஆற்றலற்று வருந்துவதை ஒருபுறம் பார்க்கின்றேன். உம்மை நினைந்து உருகாத நெஞ்சம் பகீர் பகீரென நடுநடுங்கி வருந்தப் பார்க்கின்றேன். உம்மை அலங்கரித்து உம் மழகைக் கண்டு உவக்காது,

தன்னை அலங்கரித்து தற்பெருமையால் தீய காட்சி களைக் கண்டு களித்த கண்கள், காணும் சக்தி யற்று குருடாக நின்று வருந்தும் காட்சியைக் காண்கின்றேன். உம் சிறந்த திருவிளையாடல்களைக் கேட்டு மகிழாத செவி, செவியின்பம் பெருது மந்தப்பட்டு உழல்வதைப் பார்க் கின்றேன். உம் சந்நிதியில் நின்று கூப்பி வணங்காத கரங்கள் அதோ குறைவுற்று பிச்சையேற்க நீண்டு, அலைவதையும் காண்கின்றேன். உம்மை வணங்கி உயர் நெறியில் நில்லாதவர்க்கு இதைவிட வேறு என்ன அத் தாட்சி வேண்டும்? இவைகளைக் கண்டும் இறை வழிபாடு எதற்கு என்று பேசுவோரைக் கண்டு இரக்கப்படுகின் றேன். என்று இராமலிங்க வள்ளலார் மனங்குழைந்து இயம்புகின்ருர்.

போரூர் மேவும் புனித மயிலூர்ந்திடும் முருகா! உம் பொன்னடியைக் கண்டு போற்ருமல், இந்த ஒருசாண் வயிற்றுக்காக ஊரூராய் அலைந்து உழைத்து உழைத்து ஓய்ந்தேன். என் வாழ்நாளெல்லாம் வீணுகக் கழிந்து விட்டனவே! உடலையும், இதைச் சார்ந்த மனைவி மக்கள், சுற்றம், யாவரையும் நம்பி காப்பாற்றி வந்தேன். ஆயின் இவர்களால் அடியேனுக்குப் பயன்ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே! ஐயகோ! இறுதியில் யாரும்வந்து துணை செய்வார்கள் என நம்பமுடியவில்லையே! உம்மை மறந்து அவர்களைநம்பி அவமாக வாழ்ந்து விட்டேனே! தேரூர்ந்து பவனிவரும் தேவதேவா! திருப்போரூர்குமரா! நின் தாளே எளியேனுக்கு இறுதித் துணையென இதோ தஞ்சமாய் அடைகின்றேன். ஆறுதலை யளிக்கும் அன்பரகத்தாமரை வாசனே! ஆறுபடைக் கோயில்களிலும் அருட்கோலம் கொண்டு விளங்கும் அறுமுகப் பெருமானே! ஆண்டு அருள்புரிவாயாக! என ஒரு அன்பர் அஞ்சலி செய் கின்ருர்.

பெருமானே! உம்மைப் போற்ருத நாளெல்லாம் பிறவாத நாளே! என சமய குரவரும், பழுதுபோய் ஒழிந்தன நாட்கள் என ஆழ்வாரும் இறை வழிபாடு செய்யாது கழிந்த நாட்களை எண்ணி இகழ்கின்றனர். உடல் வளர உணவு அவசியம் போல் உயிர் வளர

பிரார்த்தனை அவசியமாகும் என மாநிலம் போற்றும் மகான் காந்தியடிகள் கூறியுள்ளார்.

எனவே உடலை மட்டும் வளர்த்து பயனென்ன? வெறும் உடல்மட்டுமா நாம்? உயிரையும் வளர்த்தால் தானே சிலப்பதிகாரம் செப்புவது போல், செல்லும் தேயத்துக்கு உறுதுணை தேட வியலும்?

மல்லல்மா ஞாலத்து வாழ்வீ ரிங்கு
செல்லுந் தேயத்துக்குறு துணை தேடுமின். (சிலப்பதிகாரம்)

ஏன் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளா இந்த உடலோடு இவ்வுலகத்தில் நாம் வாழப்போகின்றோம்? எனவே அழியும் உடலை மட்டும் அரும்பாடுபட்டு அறு சுவையால் வளர்க்காதீர். அதற்கு மூலாதாரமான உயிரையும் வழிபாட்டால் (பிரார்த்தனையால்) வளர்ப்போமாக. இறை வழிபாடு தான் உயிருக்கு உற்ற துணையாகும். அது மட்டிலுமன்று. அன்றாட வாழ்க்கையில் அல்லல்கள் பல வந்து மோதும் போழ்து மனம் வருந்துகின்றது. அது சமயம் இறைவனை நினைத்துத் தியானம்செய்தால் மனம் பெருத்த ஆறுதலடைகின்றது. இதை அநுபவத்தில் கண்ட பெரியோர்கள் வருந்துகின்ற மனத்திற்கு பெரும் ஆறுதலாகக் கண்டனர் இறைவழிபாட்டை. எனவே இறை வழிபாடு மக்களாகிய நமக்கு இன்றியமையாத துணை என்பதை உணர்ந்து மேற்கொள்வோமாக.

## 2. கூட்டு வழிபாடு

இறை வழிபாட்டில் உருவ (விக்கிரக) வழிபாடு என்றும், அருவ வழிபாடு என்றும் இரண்டு முறைகள் நமது இந்து மதத்தில் உண்டு. இம் முறை பிற மதங்களில் இல்லை. நமது முன்னோர்கள் பாமரமக்கள் ஆலயங்கட்குச் சென்று விக்கிரக வழிபாடு செய்து, படிப்படியாக முன்னேற்றம் பெறட்டும் என்ற கருணையால், கையாண்ட கண்ணியமான முறையாகும் உருவ வழிபாடு. இஃது இங்கிலாந்தைக் காணாத இளைஞர்கட்கு ஆசிரியர் பூகோளப் படம் வரைந்து உணர்த்திப் போதிப்பது போன்றதாகும். படிப்பு வாசனையில்லாத பாமர மக்களும் உருவ வழிபாடாற்றிவரின், இறுதியில் இறைவ

னருளைப் பெறலாம். உருவ வழிபாட்டில் பண்பட்டு இறையன்பு வளர்ந்து பக்குவ நிலை யெய்தி, நாளடைவில் பார்க்கு மிடமெங்கணும் பரமனை நீக்கமறப் பார்த்து மகிழும் பரமஞானியாகலாம். இது இந்துமதம் கண்ட எளிய, உயரிய மார்க்கமாகும். எனவேதான் மக்கட்கு இறைவழிபாட்டை நினைவூட்டவே எண்ணற்ற ஆலயங்களை நாடெங்கும் நிறுவியுள்ளனர் நமது முன்னோர்கள்.

இந்த இறைவழிபாட்டை நம்மவர்கள் பலர் தங்கள் இல்லங்களிலும் அமைத்து வழிபாடு நிகழ்த்தி வருகின்றனர். எனின் அவரவர் தனித்தனியே வழிபாடு செய்து, தங்கள் தங்கள் வரையில் முடித்துவிடுகின்றனர். இதனால் இந்துக்களிடையே அன்னியோன்னியமான சமய ஐக்கிய உணர்ச்சி, பொது தெய்வீகச் சத்தி வளர வழியில்லாமலிருக்கின்றது.

இவண் அடியேன் அநுபவத்தில்கண்ட ஒருசெயலை வாசக அன்பர்கட்கு நினைவூட்ட விரும்புகின்றேன். காந்தியடிகளின் தேசிய விடுதலை அறப்போரில் கலந்து, அடியேன் சிறையில் வாழும்பாக்கியம் பெற்றேன். அந்தநாளில் அங்கு நிகழ்ந்த செயல் அடியேன் உள்ளத்தைக் கிளறி விட்டு உளையச் செய்துவிட்டது.

ஒருநாள் காலை உணவை முடித்து விட்டு உட்புற சிறைவிடுதியில் சாலகம் வழியாகப் பார்வையைச் செலுத்தி நின்ற வண்ணமிருந்தேன். ஒரு முஸ்லீம் சகல ஆடம்பரமான ஆடைகளையும் அணிந்து மிதியடியும், குடையுமாக ஒருபெரிய(மௌல்வி) குருவைப் போன்ற தோற்றத்தில் வேகமாக வந்து கொண்டிருந்தார். அவரது கோலத்தைக் கண்ட எனக்கு ஐயம் வந்துவிட்டது. தண்டனை யடைந்த கைதியை இவ்வித உடையோடு சிறை உள்வர அனுமதிக்க மாட்டார்களே! சிறைஉள் அன்னியர் வரவும் அனுமதியில்லையே! இது என்ன ஆச்சரியமாகயிருக்கின்றதே. என்று அங்கு உடன் சென்ற சிறை வார்டரை (சிறைக்காவலனை) அழைத்து அவர் யார் என்று கேட்டேன்?

இன்று வெள்ளிக்கிழமை யல்லவா; சிறையில் உள்ள முஸ்லீம் கைதிகளுக்கு நமாஸ் ஓதி வைப்பதற்காக வரும்

முஸ்லீம் குரு அவர். பிரதி வெள்ளிக்கிழமையும் அவர் இங்கு வந்து வழிபாடு செய்யவைத்துச் செல்லுமாறு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது என்று அக் காவலர் கூறினர்.

சிறையில் மொத்தம் எத்தனை முஸ்லீம் கைதிகள் இருக்கின்றனர்கள்? என்று கேட்டேன். முன்னர் பத்து கைதிகள் வரை இருந்தனர். இன்று மூன்று முஸ்லீம் கைதிகள்தானிருக்கின்றனர் என்றார். மூன்று முஸ்லீம் கைதிகளுக்காகவா ஒரு முஸ்லீம் குரு வந்து வழிபாடு நடத்திவைக்கின்றார். என்ன விந்தை? முஸ்லீம்களுடைய கட்டுப்பாடும், இறை வழிபாட்டில் அவர்கள் கையாளும் கூட்டுவழிபாட்டு முறையும், பெரிதும் போற்றத்தக்கதாக யிருக்கின்றதே! சிறையிலும் அவர்கள் கூட்டுவழிபாடு சிதையாமல் செய்யப்படுகின்றதே எனச் சிந்தித்து மகிழ்ந்தேன்.

அதன் பின்னர் ஞாயிறன்று காலை கையில் பைபிளுடன் ஒரு பாதிரியார் வருவதைப் பார்த்தேன். அவர் சிறையிலுள்ள கிறிஸ்தவக் கைதிகள் சுமார் இருபது பேர்களுக்கும் பிரார்த்தனையை கூட்டு முறையில் நடத்தி வைப்பதாகத் தெரிந்தது. இதுவும் அரசாங்க ஏற்பாடு என்று அறிந்தேன்.

மிகுதியாக உள்ள இந்துக்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர்களே! அவர்களுக்கு வழிபாடு நடத்த ஒரு ஏற்பாடும் இல்லையா? அரசாங்கம் இதைக் கவனிக்க வில்லையோ? என்று சிறைக் காவலனைக் கேட்டேன். இந்துக்களுக்காக ஒரு ஏற்பாடும் செய்யவில்லை என்றான். காரணம் என்ன என்று கேட்டேன்? முஸ்லீம்கள் கூட்டாக வெள்ளிக்கிழமை தோறும் சேர்ந்து வழிபாடு செய்கின்றனர். கிறிஸ்தவர்கள் ஞாயிறுதோறும் சேர்ந்து வழிபாடு செய்கின்றனர். இந்துக்களாகிய நீங்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் சேர்ந்து வழிபாடு செய்தால்தானே! அரசாங்கத்தின் மீது குறைகூறக் காரணமில்லையே! என்று அக் காவலன் கூறும்போது உண்மையாகவே நாணத்துடன் தலைகுனிந்தேன். அது சமயம் சிறையில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை சுமாராகச் சொல்லுகின்றேன். முஸ்

லீம்கள் மூன்று. கிறிஸ்தவர்கள் இருபது. இந்துக்கள் ஆயிரத்து ஐந்நூறு. அன்பர்களே! இந்த அவக்கேட்டை எண்ணிப்பாருங்கள். மூவருக்கு வழிபாடாற்ற ஒரு குரு. இருபது பேர்கட்கு வழிபாடாற்ற ஒரு குரு. ஆயிரத்து ஐந்நூறு இந்துக்களுக்கு வழிபாடாற்ற ஒரு குருவும் அமைக்கப்படவில்லை. இது பெருத்த அவமானமாகயிருந்தது. இந் நிகழ்ச்சியைக் கேட்ட எந்த இந்துதான் வெட்கப்படாமலிருக்கமுடியும்?

இதிலிருந்து இந்துக்களாகிய நாம் இறைவழிபாட்டில் கூட்டு முறையை கையாளாதது பெரும் பிழை யென்று உணர்ந்தேன். இந்த எண்ணம் அடியேனுக்கு ஏற்கனவே உண்டு. என்றபோதிலும் இந்நிகழ்ச்சியைக் கண்டபோது என் நெஞ்சம் பெரிதும் அவமானத்தால் பேதுற்று வருத்தமடையச் செய்தது. இடைக்காலத்தில் தோன்றிய மதங்கள் இறை வழிபாட்டைக் கூட்டுமுறையில் செய்து, கோரிய முன்னேற்றத்தைக் காண்கின்றது. பாருக்கெல்லாம் இறை வழிபாட்டை முறை வகுத்துத்தந்து வழிகாட்டிய, பழைமையான, வேதகால இந்துமதம், இங்ஙனம் பின்னணியில் உழல்கின்றதே! என மனம் பதைத்தது. குறைபாடு இந்துமதத்தின் மீதல்ல. அதை அங்கமாக உடைய மக்களாகிய நம்முடையதே.

பண்டைக் காலத்தில் நமது முன்னோர்கள் கூட்டு வழிபாட்டு முறையை, பஜனைக்கோயில்களை ஊர்தோறும் அமைத்து, அதன் மூலம் வளர்த்துவந்துள்ளார்கள். அந்த நல்ல வழக்கம் நாளடைவில் நலிந்துவிட்டது. மார்கழி மாதத்தில் கூட இக்காலத்தில் பல ஊர்களில் பஜனை வழிபாடு (கூட்டு வழிபாடு) பெரிதும் குறைந்து விட்டது. காரணம் இக்கால நவநாகரிகத்தின் பெயரால் இதுபோன்ற பஜனை வழிபாட்டு முறைகளைக் கண்டு பரிகாசம் புரியும் மக்கள் நம்மில் மலிந்துவிட்டதுதான். சிரத்தையில்லாமையுங் காரணமாகும். இந்த நவநாகரீக பிற மொழிப் பயிற்சியாளர்கள், அதில் மோகப்பட்டவர்கள், எவர்களிடமிருந்து தாங்கள் நவநாகரிகத்தைப் பின்பற்றுகின்றார்களோ அவர்கள் பெரிய பெரிய பட்டதாரிகள் அல்லது பதவியாளர்களாகயிருப்பினும், ஞாயிற்றுக்

கிழமை தோறும் அதிகாலையில் கையில் பைபிளுடன் குறித்த நேரத்தில் கூட்டுப் பிரார்த்தனைக்கு, விரைந்து சென்று வழிபடுவதை ஏன் உணர்வதில்லை? சிந்தித்து ஏன் செயலில் படுவதில்லை? என்பதை எண்ணும்போது பெரும் விந்தையாக யிருக்கின்றது! இங்ஙனம் நம் முன்னோர்கள் கூட்டு வழிபாட்டுமுறையையும் விட்டுப், பின்னர் தாங்கள் மதிக்கும் பிற மதவாதிகளது கூட்டு வழிபாட்டு முறைகளைக் கண்டும் பின்பற்றாது, பயனற்ற அவர்களதுபழக்கவழக்கமுறைகளைமட்டும்பின்பற்றுவது, எவ்வளவு தவறு என்பதை எண்ணித் தெளியவேண்டும்.

பிற மதங்களில் ஏக தெய்வ வழிபாடாகயிருக்கின்றது. அதனால் எல்லோரும் சேர்ந்து கூட்டுவழிபாடு நடத்தும் வாய்ப்பு அவர்கட்கு வாய்த்துள்ளது. இந்து மதத்தில் இறைவழிபாட்டில் பல உட்பிரிவுகளிருக்கின்றனவே எங்ஙனம் எல்லோருமாக இணைந்து வழிபாடாற்றுவது? என்று கூறுவோருமுண்டு.

எத்தனை உட்பிரிவுகள் இருந்தால்தான் என்ன? சைவம், வைணவம், வேதாந்தம், சித்தாந்தம் முதலான எம்முறைகளைக் கையாண்டாலும் எல்லோரும் இறைவனை ஒப்புக்கொண்டு வழிபாடு ஆற்றுவோர்கள்தானே! அவ ரவர்கள் வழிபாட்டுப் பாடல்களையும், முறைகளையும் வகுத்து தொகுத்து வாரத்துக்கு ஒருநாள் ஏன் சேர்ந்து கூட்டு வழிபாடு செய்யக்கூடாது? அவரவர்கள் வழிபடும் இறை உருவை எண்ணியே கூட்டு முறையில் வழிபாடு செய்தால் தங்கள் நியமம் தவறக் காரணமில்லையே? எல்லோருடைய வழிபாடும் வேண்டுதலும் ஒரே இறைவனிடம் தானே சென்று பதிவாகப்போகின்றது? முறைகள் தானே வேறு. மார்க்கங்கள் பலவாயினும் முடிவு ஒன்று தானே?

இந்த உயர்ந்த கூட்டுவழிபாட்டு முறையை நம்முடன் அண்மை வரையில் வாழ்ந்த, வையம் போற்றும் காந்தியடிகள் கையாண்டு, சரித்திரமே காணாத சாதனைகளைச் சாதித்து வழிகாட்டியுள்ளாரே! அதை நாம் சிந்தித்து சீர்தூக்கிச் செயலில் பின்பற்றவேண்டாமா? அவரை கிறிஸ்தவ நண்பர்கள் அவர்கள் சர்ச்சு (கோயிலு)க்கு

அழைத்தபோதும், முஸ்லீம் நண்பர்கள் மசூதிக்கு அழைத்தபோதும், அவர் அங்கு சென்று அவர்களுடன் சேர்ந்து வழிபாடு செய்துள்ளாரே! அங்கே யாரைக் கண்டு வழிபட்டார்? தனது வழிபடு இறைவனை இராமனையே எண்ணி வழிபட்டார். அதுமட்டிலுமன்று இறை வழிபாட்டு முறையில் காந்தியடிகள் கையாண்டு வந்த பிரார்த்தனைப்பாடல்கள் அட்டவணைப் புத்தகத்தை அன்பர்கள் வாசித்துப் பார்ப்பார்களாக. அதில் அவர் தினசரி இருவேளை இறை வழிபாடுகளிலும், கீதை, குரான், பைபிள், பார்சிமத நூல் முதலான மத நூல்களிலிருந்து பாடல்களைத் தொகுத்து அவைகளைப் பாடியே வழிபட்டு வந்துள்ளார்.

காந்தியடிகள் ஆரம்ப முதலே கூட்டு வழிபாட்டு முறையையே கையாண்டு நடத்தி வந்துள்ளார். அந்த கூட்டு வழிபாட்டினால்தான் அவர் சிறந்த ஆத்ம சக்தியைப்பெறவும், கோடிக்கணக்கான மக்கள் உள்ளத்தைக் கவரவும் ஆற்றல் சித்தியாகப் பெற்றார். தன் ஆன்மா கடைத்தேற்றம் அடைவதை மட்டும் அவர் விரும்பினாரில்லை. உலக மக்களும் கடைத் தேற்றம் பெறவேண்டும் என்ற கருணையால், அவர் கூட்டுப் பிரார்த்தனை முறையைக் கையாண்டுவந்தார். அதனால் பெற்ற அற்புதச் சக்தியையும் அகிலமெலாம் அறியச் செய்துவிட்டார்.

காந்தியடிகள் வாரத்துக்கு ஒருநாளா கூட்டுவழிபாட்டை நடத்தினார்? தினசரி பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கு பெறுமாறு பிரார்த்தனையை நடத்தி வழிகாட்டினார் அவர். அந்தக் கூட்டு வழிப்பாட்டில் எத்தனையோ நல்ல உள்ளம் படைத்த புண்ணிய சீலர்கள் சேர்ந்திருப்பார்களல்லவா? அவர்களுடைய உயர்ந்த சக்தியெல்லாம் திரண்டு ஒரு பெரிய ஆத்மசக்தியை உருப்பெற வைத்தது நம் நாட்டில், என்பதை அவர்காலவாசிகளாகிய நாம் நேரில் கண்ட உண்மைதானே!

இஃதே போன்று அடியாருடன் கூடி இறைவனை வணங்குதல் வேண்டும் என்பதை நம் அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவைப் பிராட்டியார்,

"வேடமும் நீறும் விளங்கி மெய்நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!"

என அடியாருடன் சேர்ந்து ஆண்டவனை வணங்குவதை அழகுற அறிவித்துள்ளார்.

ஏதங்கெடுத்து நம்மை இன்புற வைக்கும் வாதவூர் ஞான குரு நாதர், வேதம் விளக்கும் விழுமிய வாசகத்தில் வரைந்து நமக்கு வழிகாட்டும் பின்வரும் பெருவாக்கை யுன்னுவோமாக.

தொண்டர்காள்! தூசிசெல்லீர் பத்தர்காள்! சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே! பேரணி உந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே! கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே.

'அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்'

என இறைவன் அருள்பெற கூடிவணங்கும் அடியவர்கட்கு இறைவன் அருள் வழங்குந் தன்மையையும் அவர் விவரித்துள்ளார் கீர்த்தித் திருவகவலில்.

'துட்டினத்தைச் சார்ந்து தொல்லையில் புரளற்க' எனப்பட்டினத்துஅடிகளார்பகர்வதையும் பார்ப்போமாக.

சிறந்த மெய்யடியார்கள் கூட்டுறவும், நிறைந்த அன்பினால் நித்தலும் இறைவனை வழிபாடு ஆற்றுவதுந் தவிர்த்து உலகில் மக்கட்கு வேறு பயன் தரக்கூடியது என்ன இருக்கின்றது? அயனால் வகுத்த உறவினர்களும், உற்ற மனைவியும், பெற்ற பிள்ளைகளும் அவர்களால் வரும் வாழ்வும், தடியா லடியுண்ட மண்பானைகளின் கதியாகி விடுமே! இதை எண்ணியாவது சன்மார்க்க அடியாருடன் சார்ந்து இறை வழிபாடாற்றி ஈடேற்றம் பெறக் கூடாதா? எனப் பின்வரும் பாடலில் அவர் பேசுகின்றார்!

அடியா ருறவும் அரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறெக்கு மென்றினஞ் சார்ந்திலரே!

கருமூலந் தோன்றி கன்ம வயப்பட்டு கட்டழியும் மக்கட்கு, திருமூலந் தெரிவிக்கும் பின்வரும் தெளிவான விளக்கத்தைத் தெளிந்து உன்னுவோமாக.

உடையா னடியா ரடியாருடன் போய்ப்
படையாரழன் மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
வுடையான் விடுகென வோல மென்றூரே.

உடலூர்ப் பவப்பிணி யாவு மொழித்து உவகை பெற்று நாம் உய்ந்திட, வடலூர் வள்ளலார் வழிகாட்டும் வாலறிவான பின் வரும் வாக்கையும் உன்னுவீர்களாக.

பொன்னம்பலப் பெருமானே! பொன்னனைய அடியார் பலர் கூடிய மெய்ஞ்ஞானங் கமழும் ஒருமை யுணர்வுள்ள திருக்கூட்டத்தைக் காணவும், அதைச் சாரவும் அவர்களோடு உம் திருக்கோயிலைச் சார்ந்து பணியவும், உலகிற்கு உயர் வழிகாட்டும் அப்பேரவை உயர்ந்து விளங்கவும் செய்கின்ற அத்திருக்குழுவில் அடியேனும் ஒரு உறுப்பினனாய்ச் சேர்ந்து உள்ளம் குளிரவும் உரோமம் சிலிர்க்கவும் அன்பு உருகவும் உம்மைப் பாடிப் பணிய பேரவாக் கொண்டுள்ளேன். என அடியார்கள் கூட்டு வழிபாட்டைச் சிலாகித்துத் தன் பேராவலை வெளிப்படுத்துகின்றார் அருட்பிரகாசர்.

தங்கமே யனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவுஞ் சங்கஞ்
சார்திருக் கோயில் கண்டிடவுந்
துங்கமே பெறுஞ் சற்சங்க நீடூழி
துலங்கவுஞ் சங்கத்தி லடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
யாடவு மிச்சைகா ணெந்தாய்.

கூடேனே வடியருடன் கோவே யெங்
குகனே! யெங் குருவே! யென்று
பாடேனே வானந்தப் பரவசமுற்
றுன்கமலப் பதநண் ணேனே!

குமரகுருபர அடிகளார் கூறும் குருவாக்கையும் கூர்ந்து சிந்திப்போமாக.

"இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மை விடுத்து
ஆயும் பழைய வடியா ருடன் கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்து"

இங்ஙனம் அடியாருடன் கூடி கூட்டு வழிபாடு செய்து அருள் பெறுவதை, பெரும் பேருக எண்ணினர் எண் ணற்ற பெரியோர்கள். எண்ணிய வண்ணம் கூட்டு வழிபாடாற்றி தாமும் இன்புற்று தரணியெலாமும் இன் புற வைத்தனர். அதனுல்தான் அன்று இந்து சமுதாயம் செழித்துச் சீருஞ் சிறப்புமாக விளங்கி வந்தது.

இத்தகைய கூட்டு வழிபாடு முறை இடைக்காலத்தில் நாளடைவில் அருகிக் கொண்டே வந்து விட்டது, இந்து மக்களின் அயற்சியாலும் முயற்சி யின்மையாலும். யார் செய்த புண்ணியமோ இன்று கூட்டு வழிபாடு வாரவழி பாடு மூலம் மீண்டும் திருவருள் தவநெறி மன்றம் மூலமாக வும், அருள்நெறிக் கழகம் மூலமாகவும், உயர் சைவத்திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், சீலத்திரு. திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசார்ய சுவாமிகள், குன்றக்குடி அடிகளார் சிவத்திரு. தெய்வசிகாமணி பரமாசார்ய சுவாமிகள், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் போன்ற பெரியோர்கள் மற்றும் பல அறிஞர்கள் பெருமுயற்சியாலும் தமிழக மெங்கும் பரவி வருகின்றது. இந்த கூட்டு வழிபாடு இந்துமக்கள் வாழும் ஒவ்வொரு ஊரிலும் மிக இன்றியமை யாதனவாக நிறுவப்பட்டு தவருது நடைபெற்று வர வேண்டும். இதுதான் இன்றைய இந்து சமுதாயம் உருப் பெற்று மக்கள் உயரிய பண்பாட்டை அடைய உதவும் மார்க்க மாகும். அரும்பாடு பட்டு ஆன்ருேர்கள்

தேடிவைத்த அருங்கலையும், ஆத்தீக வளர்ச்சியும் அருகவேதான், நாட்டில் பஞ்சமும், பசிப்பிணியும், வேலையின்மையும், வறுமையும் கடந்த சில ஆண்டுகளாக கடுமையாக மக்களைத் தாக்க முற்பட்டுவிட்டது. பஞ்சம் வந்த காரணம் பலருக்குப் புரியாமல் ஏதேதோ பேசினர். ஒவ்வாத உணவுகளை உண்டால் உடலில் நோய் காண்கின்றது. அது போன்று அநீதிகள் வளர்ந்தால் அதன் பலனை பஞ்சம் வரத்தானே செய்யும். கெட்டதைச் செய்து விட்டு நல்லதை எதிர்ப்பார்க்க முடியுமா? மக்களில் பலர் மறத்துறையில் மனங் கூசாமல் பொருளீட்ட முற்பட்டனர். மேலை நாட்டு யுத்த சூழ்நிலை அதற்கு உற்ற துணையாக நின்றது. எனவே அநீதப் பொருளீட்டம் உச்ச நிலை எய்தியது. எங்ஙணும் பொருளாதாரம், அரசியல், சமயம், சமூகம் ஆக யாவையும் பாதித்து விட்டது. இதன் காரணமாக மாரி வளங் குன்றியது. இறைவழிபாடும் குறைவழிபாடாக குறுகியது. ஆகவே பஞ்சமும்பசிப்பிணியும் பெருகியது. இற்றைஞான்றுமீண்டும்இறைவழிபாடும் கூட்டுவழிபாடும் அன்பும் ஒழுக்கமும் எங்கும் பரவ முற்படவே, இந்த ஆண்டு தமிழக மெங்கும் போதிய மழை வந்து மக்கட்குப் பெருந்துணை புரிந்துள்ளது. கூட்டு வழிபாட்டில் ஈடுபடுவோர்களுடைய மனங்குழைந்து செய்யும் பிரார்த்தனைக்கு பேராற்றலுண்டு. பலருடைய கூட்டுறவும் அன்பும், பரஸ்பரம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும்,பரந்த நோக்கமும், சிறந்தசிந்தனை உணர்வும்ஒற்றுமை உணர்வும் கூட்டு வழிபாட்டில் காணலாம். தனித்தனியாக அவரவர் ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதை விட எல்லோருமாகச் சேர்ந்து கூட்டாக வாரத்துக்கு ஒருநாள் வழிபாடு செய்வது மிக்க பயனுடையதாக யிருக்கும்.

## வேண்டுதலற்ற வழிபாடு

காமிய பக்தி என்றும், நிஷ்காமிய பக்தி என்றும் வழிபாட்டில் இருவகைகள் உண்டு என்பது கீதாநாதர் து பெருவாக்காகும். அதாவது வேண்டுதலுடன் வழிபாடு செய்வதும், வேண்டாமை யற்று அன்பிற்காக மட்டும் வழிபாடு செய்வதுமாகும். இவை இரண்டில் வேண்டாமை வழிபாடே சிறந்ததாகும். ஆதலால்தான்

இறைவன் தன்மையை விளக்க வந்த தமிழ்மறையாசிரியர் திருவள்ளுவப் பெருந்தகையார்,

> வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டும் இடும்பை யில.

என எழிலாக வரைந்து காட்டுகின்றார். எனவே நாம் இறைவனிடம் வேண்டி விண்ணப்பிக்கின்றவரையில் இறைவன் காத்திருப்பதில்லை. அவர் ஏற்கனவே அவ ரவர் ஊழ்வினையை அனுசரித்து வகுத்து அனுப்பிவிட்ட வண்ணம்தான் நம் வாழ்க்கைரதம் இயங்குகின்றது. ஆகவே ஆண்டவனிடம் வழிபாடு செய்கையில் வேண்டு தல் கோரி வழிபடவேண்டியது அவசியமில்லை. கர்மத் துக்கு ஈடாகவே அவரவர் கருத்து செயல்படும். கருத் தறிந்து ஆவன செய்விப்பது கடவுள் செயலாகும். நாம் இறைவனது அரிய பெரிய ஆற்றல்களையும், திருவிளை யாடல்களையும், அவனது ஒப்பற்ற கருணையையும் எண்ணி எண்ணி அன்பினால் கோரிக்கை யில்லாது வழி பாடு செய்வதே சிறந்ததாகும். நாம் நினைப்பது அல்லது கோருவது, அல்லது வேண்டிநின்று பிரார்த்திப்பது ஒன்றும் நிறைவேறுவதில்லை என்பதை அனுபவத்தில் அறிந்திருந்தும் எதற்காக வீணே வேண்டுதலோடு வழி பாடு செய்தல் வேண்டும்? கைம்மாறு கருதாமல் கடவுள் நம் யாவரையும் காத்துவருகின்றார். கைம்மாறு கருதாத கடவுளிடம் நாமும் கைம்மாறு கருதாமல் அவர்தம் கருணையைக் கருதி கனிந்த அன்புடன் வழிபாடு செய்வது தானே சிறந்த முறையாகும். நல்ல நினைவுகளைச் சதா சிந்தித்துவரின் நாளடைவில் பலனளிக்கும்.

'தான் நலமாக வாழவேண்டும். தன் மனைவி மக்கள் சுகமாக வாழ வேண்டும். தன் சுற்றமும், குடும்பப் பரம்பரை யும் பெருமையோடு விளங்கவேண்டும். தன் விரோதிகள் தாழவேண்டும்' எனவேண்டுதல் செய்து வழிபடுவது தவறாகும். இது தன்னல வழிபாடாகும். இம் முறையான வழிபாடுகள் வழிபாடுசெய்த எண்ணிக்கையில் சேராது. உள்ளமும் உயர்ந்த பண்பாட்டை அடையாது. உலகத்திலுள்ளவர்கள் யாவரும் உயர்ந்து இன்புறவேண்டும் என்று வழிபாடு செய்வது

உயர்ந்த பரநலமாகும். தமிழ் நாட்டின் தனிப் பெருந் தவச் சீலர் அருள்மொழியாளர் திருமுருக. கிருபானந்தவாரிஅவர்கள் அடிக்கடி பல்லாயிரக்கணகான மக்கட்கு "எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்; அந்த எல்லோரிலும் நீங்கள் ஒருவர்தானே. ஆகவே எல்லோரும் இன்புற்றால் நீங்களும் இன்பம் அடையத் தானே செய்வீர்கள்; பிரார்த்தனை போது நலமாகவுமிருக் கின்றது. அதில் உங்கள் நன்மையும் அடங்கிவிடுகின்றது" என்று அழகாகப் போதிப்பார். இது மிக விழுமிய மெய் வாக்காகும். பிறர் நலங் கோரும் பொது வழிபாடாகும். நாடெங்கும் வாழ்ந்தால் நாமும் வாழ்வோமல்லவா?

எனவே பரந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட வழிபாடு, தனி முறையைவிட கூட்டுமுறையில் செய்வது பயன்தரத் தக்கதாயிருக்கும் வாய்ப்புடைய தாகும். இறைவன் தன்மையே பிறர்நலங் கோருவதுதான். அந்த இறைவனை வணங்கி அவர் அருள்பெற விரும்பும் நாமும் பிறர் நலங்கோரி வழிபாடு செய்வதுதான் உய்யும் மார்க்கமாகும். ஆகவே இறை வழிபாட்டில் வேண்டுதல் கூடாது. வேண்டுதலோடு வழிபடவேண்டும் என விழைவோமாயின் அஃதும் பிறர் பொருட்டான வேண்டுத லாகயிருக்கட்டும். பாரெல்லாம் நன்றாக வாழவேண்டு மென்ற வேண்டுதல் வழிபாட்டால் நாளடைவில் பரந்த ஞானம் உண்டாகும்.

## கூட்டு வழிபாடு முறைகள்

இதுகாறும் நாம் கண்ட ஆராய்ச்சியில் கூட்டு வழி பாடு அவசியம் என்பதை உணர்ந்தோம். இனி கூட்டு வழிபாடாற்றும் முறைகளைக் கவனிப்போமாக.

இந்து மக்களாகிய நாம் இறைவழிபாட்டை அவரவர் பெற்றோர்கள் வணங்கி வந்த வழக்கமான இறை வழிபாட்டை, இல்லத்தில் தினசரி தவறாது தனியாகவும், இயன்றால் குடும்பத்திலுள்ளோர்களுடன் சேர்ந்து கூட்டாகவும் வழிபாடு செய்தல்வேண்டும். தங்கட்கு இருக்கும் நித்திய வேலைகளை அனுசரித்து இறைவழி பாட்டு நேரத்தை நிர்ணயம் செய்துகொள்ளல் வேண்டும்.

சைவ வைணவ வேற்றுமைச் சமய உணர்வை சிந்தனையை விட்டு அகற்ற வேண்டும். எப்பெயரிட்டு எவ்வடிவை வணங்கினுலும் எல்லாம் முடிவில் ஒரு இறைவனையே சாரும். காரணம் கடவுள் ஒருவரே தவிர பலரில்லை. அவர் ஒருவரேதான் எல்லாவற்றிலும் நிறைந்துள்ளார். மொழியும், பெயரும் உருவும் மாறுபட்டிருக்கலாம். அதனல் பல கடவுளர்களிருக்கின்றுர்கள் என எண்ணுவது பேதைமையாகும்.

பின்னர் பெண்கள் வெள்ளிக்கிழமை தோறும் அந்தந்த ஊர் ஆலயத்தில் மாலைநேரத்தில் கூடி கூட்டுமுறையில் வழிபாடு செய்ய அதற்கென தேர்ந்தெடுத்த இறை வழிபாட்டுப் பாடல்களை முதலில் ஒருவர் சொல்ல மற்றவர்கள் அடக்கமாகவும் அமைதியாகவும் ஒருமனத்தோடு தொடர்ந்து சொல்லி வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் வழிபடும்போது தங்கள் வழிபடு தெய்வத்தின் திருவுருவை நினைவிலிருத்திக்கொள்ளல்வேண்டும். பின்னர் சில நிமிடங்கள் மௌனமாக யாவரும் பிரார்த்தனை செய்தல் வேண்டும். முடிவில் பின்வரும் பொது விண்ணப்பத்தை ஒருவர் சொல்ல யாவரும் ஏகோபித்துச் சொல்லிப் பிரார்த்திக்கவேண்டும்.

"எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறைவனே! தேவரீர் எங்கு எவ்வுருவில் எப்பெயரில் எவ்வேளையில் விளங்கினுலும் இதோ எங்களது பணிவான விண்ணப்பத்தை உம் திருமுன்னர் சமர்ப்பிக்கின்றேம். இது உம் திருச் சமூகத்தில் பதிவதாக.

நாங்கள் உண்ண உணவும், அருந்த நீரும், உலவ பூமியும், சுவாசிக்கக் காற்றும், காணச் சூரிய சந்திர ஒளியும், எண்ண மனமும், ஏற்றிப் போற்ற வாயும, வணங்கச் சென்னியும், கூப்பித்தொழக் கரங்களும் அளித்து எங்கட்கு வாழ்வளித்த வள்ளல்பெருமானே! உமது ஒப்பற்ற கருணைக்கு இதோ எங்கள் நன்றியறிதலான வந்தனை வழிபாட்டை அன்புடன் அறிவித்துக்கொள்கின்றேம். உம்மை யார் யார் வணங்கவில்லையோ அவர்கள் சார்பாகவும் நாங்கள் வணக்கம்

**செலுத்துகின்றோம். அவர்களது அறியாமைக்கு இரங்கி அவர்களை மன்னித்து ஆட்கொள்வதுடன், எங்கும் அமைதியும், அன்பும், அறனும் நிலவி எல்லோரும் நல்லோராய் வாழ்ந்து இன்புற்றிருக்க தேவரீரது திருவருள் துணை செய்யப் பிரார்த்திக்கின்றோம்''.**

*இந்தப் பொதுப் பிரார்த்தனை முடிந்ததும் வாழ்த்து கூறிய பின்னர் அமைதியாக இல்லம் செல்லுதல் வேண்டும்.*

*இதே முறையை திங்கள்கிழமை (சோமவாரம்) தோறும் ஆண்களும், பெண்களும் எந்த அலுவல்களிருப்பினும் ஒதுக்கிவிட்டு ஊரிலுள்ள ஆலயங்களில் சென்று கூட்டுவழிபாட்டைக் கட்டுப்பாடாகவும், சிரத்தையாகவும் நடத்திவரவேண்டும். சோமவாரமும், வெள்ளிக் கிழமையும் கூட்டு வழிபாட்டிற்கு மிகச் சிறந்த நாட்களாகும்.*

*வெள்ளிக்கிழமை யன்று பெண்கள் கூட்டு வழிபாடு செய்தாலும் செய்ய வசதியில்லாது போயினும் திங்கள் கிழமை தோறும் இருபாலாரும் கூட்டு வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைக்கவேண்டும். இந்த கூட்டு வழிபாட்டைத் திங்கள்கிழமை நடத்துவதுதான் மிகச் சிறந்ததாகும். சோமவார வழிபாடு இந்துக்களுக்குச் சால உயர்ந்ததாகும். சீமந்தனியம்மையாரால் சோமவார வழிபாடு சிறப்புற்ற வரலாறு யாவரும் அறிந்ததன்றோ! உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள்கூட சோமவாரத்தன்றுதான் சிறந்த மௌன விரத வழிபாட்டை நடத்தி வந்தார். ஆகவே கிறிஸ்தவருக்கு ஞாயிறு, மகம்மதியர்கட்கு வெள்ளி கூட்டுவழிபாட்டுத் தினமாகயிருப்பது போன்று இந்துக்களுக்குச் சோமவாரம் (திங்கள்) கூட்டுவழிபாடு நாள் என்ற நியதி இனி உலகில் என்றும் நின்று நிலவும்படிச் செய்யவேண்டும். இந்தப் புதிய சகாப்தத்தை இந்துக்கள் வளர்த்து நிலைபேறுடையதாகச் செய்வார்களாக.*

*பெரிய நகரங்களாயிருந்தால் ஒவ்வொரு பேட்டை (பகுதி)யிலும் இந்தக் கூட்டுவழிபாடு மிக அவசியம்*

நடைபெறுதல் வேண்டும். கூட்டுவழிபாட்டில் கலக்காத இந்துமக்கள் தங்கள்பிறவிக்கடமையைச்செய்யாதவர்களா வார்கள் என எண்ணித் திருத்தமடையவேண்டும். கிறிஸ் தவர்களையும், மகம்மதியர்களையும் போன்று கூட்டு வழி பாட்டைக் கட்டுப்பாடாக நடத்தி சமயத்தின் முன்னேற் றத்தை வளர்த்தல் வேண்டும். உண்பதும், உறங்குவ தும், பிள்ளைப் பேறு பெறுவதும் 'எல்லாஞ்' செய்யும் செய லாகும். ஆயின் மனிதப் பண்பிற்கு அத்துடன் சிறந்த கடமையுமிருக்கின்றது; என்பதை கடந்த காலச் சரித் திரம் நமக்கு நினைவூட்டிய வண்ணம் இருக்கின்றது. அதை உணர்ந்து நாம் மனிதப் பண்பை வளர்க்க முற்பட வேண்டும். மனிதப் பண்பு வளர சிறந்த துணையாக நிற் பது இறைவழிபாடே என்பதை அறிந்து கூட்டு வழிபாட் டின் மூலம் சமூகத்துக்குக் கடமையைச் செய்யவேண்டும்.

சைவரும், வைணவரும் அவரவர்கள் சமய குருமார் களிடம் அணுகி முறையாக அவசியம் சமய தீட்சை பெறுதல்வேண்டும். சமய தீட்சை பெறுமல் தெய்வ வழிபாடு செய்வது முத்திரை பெருத படியில் அளப்பது போலாகும். சமய தீட்சைப் பெற்று வ்ழிபாடு செய்வது அத்தாட்சி பெற்றவர் அரசாங்கத்தில் அங்கம் வகிப் பதை யொக்கும். கண்ணபிரான் தீட்சை பெருது ஆற்றிய வழிபாடு பயனற்றதென அறிந்த பின்னர், தீட்சை பெற்று வழிபாடு செய்ததாக வரலாறு பேசுகிற தெனின்; நம் போன்ற தீட்சைபெருத மக்களின் வழிபாடு எங்ஙனம் பயனுடையதாகும்? அவசியம் ஆண் பெண் இரு பாலாரும் தீட்சைப் பெற்று வழிபாடு செய்வது உத்தமம்.

இறை வழிபாடு செய்கையில் சமயச் சின்னங்களான உருத்திராக்கம், துளபமணி ஆரங்கள் அணிந்து திரு நீறும் திருநாமமும் புனைதல்வேண்டும். சமயச் சின்னங் கள் அணிந்து இறைவழிபாடு ஆற்றுவதே சிறந்த வழி பாடாகும். இதில் நாணப்பட்டு அணியாமல் விடுவது நல்லதல்ல. அரசாங்கச் சின்னங்களை அணியாத சேவகன் ஊர்க் காவல் புரியமுடியுமா? எனவே சமயச் சின்னங்கள் இறை வழிபாட்டிற்கு இன்றியமையாத சின்னங்களாகும்.

ஆலயத்துக்குச் செல்லும் அன்று குளித்திருக்க வேண்டும். செல்லும்போது பரிசுத்தமான ஆடை

அணிந்துகொள்ளுதல் வேண்டும். ஆலயத்தின் அருகில் வரும்போது இரு கரங்களையும் சிரசின் மீது கூப்பி கோபுரத்தை முதலில் வணங்கவேண்டும். பலிபீடத் தருகில் வந்ததும் தற்போதம் ஆணவமான எண்ணங்களைப் பலியிட்டுவிட்டு பக்தி பூர்வமாக தரையில் தாழ்ந்து ஆண்களாயின் எட்டு அங்கங்களும், பெண்களாயின் ஐந்து அங்கங்களும் பூமியில் படிய வணங்குதல்வேண்டும். ஆலயத்துள்ளே சென்றபின் அங்கு பூமியில் படிந்து மேற் கூறிய வணக்கங்களைச் செய்தல் கூடாது. ஆலயத்துள் புகும்போது இருகரங்களையும் கூப்பிய வண்ணம் செல்லுதல் வேண்டும்.

ஆலயத்தில் உள்ளே சென்றதும் முதலில் முன்னவரான விநாயகரை வணங்கி தோப்புக்கரணமும், தலையில் இருகரங்களாலும் குட்டிக்கொள்ளுதலும் வேண்டும். இம்முறை வணக்கத்தை மற்ற மூர்த்திகள் சந்நிதியில் கையாளக்கூடாது. விநாயகர் ஆலயம் தனித்திருக்குமாயின் ஒரு முறை வலம் வருதல்வேண்டும்.

பின்னர் அந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி ஸ்ரீ சுப்பிரமணியராயின், அப்பிரகாரத்தை ஆறு முறையும், சிவபெருமானுயின் ஐந்து முறையும், அம்பிகையாயின் நான்கு முறையும், மகாவிட்டுணுவாயின் நான்கு முறையும் வலம்வந்து வணங்கி, இயன்ருல் அர்ச்சனை செய்வித்து தோத்திரப்பாடல்களைச் சொல்லி வழிபட்டு; மீண்டும் பலிபீடத் தருகே வந்தமர்ந்து, புறத்தே கண்ட மூர்த்தியை அகத்தே கண் மூடி யமர்ந்து, கண்டு கனிந்து சிந்தித்து வணங்கி வாழ்த்திய வண்ணம் இல்லத்துக்கு ஏகுதல்வேண்டும்; என்பது நம் ஆன்ருேர்கள் வகுத்த ஆலய வழிபாட்டு முறைகளாகும்.

எனவே அன்பர்களே! இம்முறைகளை இந்துக்களாகிய நாம் பின்பற்றி வாரந்தோறும் தவருமல் கூட்டு வழிபாட்டை நடத்தி எல்லோரும் இன்புற்று வாழப் பிரார்த்திப்போமாக. சைவ வைணவர்கள் ஆகிய இரு பாலார்க்கும் பயன்படும் முறையில் தனிவழிபாடு, திருக்கோயில்வழிபாடு, கூட்டுவழிபாட்டிற்கான சில பாடல்களை இத்துடன் தொகுத்துள்ளோம். பக்தியாகப் பாடிப் பணிந்துபெருமானது கருணைக்குப் பாத்திரராவீர்களாக.

## தனிவழிபாட்டுப் பாடல்கள்

[படுக்கையை விட்டு அதிகாலை எழுகையில் வடக்கு அமர்ந்துகொள்ளவும்]

### திருநீறு எடுக்கும் போது

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே

### திருநீறு அணியும்போது

பாடற் கினியவாக்களிக்கும் பாலுஞ்சோறும்பரிந்தளிக்கும்
கூடற்கினிய அடியவர்தங் கூட்ட மளிக்குங்குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சேநீ யஞ்சேலென்மே லாணைகண்டாய்
தேடற்கினிய சீரளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்து நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!

இதுவோ எமையாளுமா றீவதொன் றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருள் ஆவடுதுறை யரனே!

ஓடு கின்றனன் கதிரவ னவன்பின்
ஓடுகின்றன வொவ்வொரு நாளாய்
வீடுகின்றன வென்செய்வோ மினியிவ்
வெய்ய கூற்றுவன் வெகுண்டிடி லென்றே
வாடுகின்றனை யஞ்சலை நெஞ்சே
மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடுகின்றவர் நாதன்றன் னாமம்
நமச் சிவாயங்கா ணம்பெறுந் துணையே.

### நீராடுகையில்

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள்மலங் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ்சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

## நித்தியஅநுட்டானமுடித்துவீட்டில்வழிபாடுதொடங்கும்போது

### சமயகுரவர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசை கன்மிதப்பி லணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி.

### விநாயகர் துதி

வானுலகு மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்று விழி நால்வா
யானைமுகனைப் பரவி யஞ்சலி செய்கிற்பாம்.

### முருகன் துதி

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னன்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி.

### சிவபெருமான் துதி

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

[இறைவன் திருவுருவிற்கு (விக்கிரகத்திற்கு) திருமுழுக்குத் தொடங்குகையில்]

## திருவாசகம்—சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க

ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னனேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்துமண்ணிறைந்துமிக்காய்விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாய் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

[என்ற சிவபுராணம் சொல்லி முடித்து]

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

### திருக்கச்சி (காஞ்சிபுரம்)

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவா ரூரா
ஒருபற்றிலாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே!

### திருவானைக்கா

துன்ப மின்றித் துயரின்றி யென்றுநீர்
இன்பம் வேண்டின் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவனென் றுள்குவார்க்(கு)
அன்ப னாயிடும் ஆனைக்கா அண்ணலே.

### திருவண்ணாமலை

பைம்பொனே பவளக்குன்றேபரமனேபால்வெண்ணீற்றாய்
செம்பொனே மலர்செய் பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணியணா மலையுளானே
என்பொனே உன்னை யல்லால் ஏதுநான் நினைவிலேனே.

### திருக்காளத்தி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத்
தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
[ஏழண்டத்
தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான் பொருப்
[பிடையான்
நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான் காளத்தி
யானவனென் கண்ணுளானே.

## தில்லை சிற்றம்பலம் (சிதம்பரம்)

பத்தில னேனும் பணிந்தில னேனுமுன்
உயர்ந்த பைங் கழல் காணப்
பித்திலனேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாயெம் பெருமானே
முத்தனையானே மணியனை யானே
முதல்வனே முறையோ வென்
றெத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே.

## அம்பிகை துதி

ஞானம் பொழியுந் தண்முகிலே நாதங்கடந்தபரவெளியில்
நடிக்கும் பெருமான் மகிழ்மானே நாடுமடியார் தமக்கென்றுந்
தானம்பொழியுந் தனிமுதலே தழைக்குங் கருணைத் தடாதகையே
தணியா மனத்தைத் தடுத்தநிறைதவத்தோர்காணுந்தயாபரியே
கானம் பொழியும் இசைமயமே கருணைபூத்த கற்பகத்தீங்
கனியே கவலைக் கடல் கடத்துங் கண்ணுரமுதே களிதுளும்ப
வானம் பொழியும் மதுரை வளர் மயிலே வருக வருகவே
மறைகள் பரவும் அங்கயற்கண் மணியே வருக வருகவே.

(கிருபானந்தவாரி)

## திருப்புகழ்

### 1-வது படைவீடு.—திருப்பரங்குன்றம்

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெயவிழைகிலன் மலைபோலே
கனைத்தெழும்பக டதுபிடர் மிசைவரு
கருத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே

வினைத்த லந்தனி லலகைள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே
தினத்தினஞ் சதுர் மறைமுனி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுனி வரர்தொழ மகிழ்வோனே
தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
**திருப்பரங் கிரி** தனிலுறை சரவண பெருமாளே.

## 2-வது படைவீடு—**திருச்செந்தூர்**

கொம்பனை யார்காது மோதிரு கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு
கொங்கையி னீராவி மேல்வளர் செங்கழுநீர் மாலைசூடிய
கொண்டையி லாதார சோபையில் மருளாதே
உம்பர்கள் ஸ்வாமீ நமோநம எம்பெருமானே நமோநம
ஒண்டொடி மோகா நமோநம எனநாளும்
உன்புக ழேபாடி நானினி அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே
பம்பர மேபோல ஆடிய சங்கரி வேதாள நாயகி
பங்கயசீ பாதநூபுரி கரசூலி
பங்கமி லாநீலி மோடிப யங்கரி மாகாளி யோகினி
பண்டுசு ராபான சூரனொ டெதிர்போர்கண்
டெம்புதல் வாவாழி வாழி யெனும்படி வீறான வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா
இன்சொல் விசாகாக்ருபாகர **செந்திலில்**வாழ் வாகியேயடி
யென்றனை யீடேற வாழ்வருள் பெருமாளே.

## 3-வது படைவீடு.— **திருவாவினன்குடி (பழநி)**

அவனிதனி லேபிறந்து மதலையென வேதவழ்ந்து
அழகுபெற வேநடந்து இளைஞோனாய்

அருமழலை யேமிகுந்து குதலைமொழி யேபுகன்று
அதிவித மதாய்வளர்ந்து பதினாறாய்
சிவகலைக ளாகமங்கள் மிகவுமறை யோதுமன்பர்
திருவடிக ளேநினைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசைமிஞ்சி வெகுகவலை யாயுழன்று
திரியுமடி யேனையுன்ற னடிசேராய்
மவுனவுப தேசசம்பு மதியறுகு வேணிதும்பை
மணிமுடியின் மீதணிந்த மகதேவர்
மனமகிழ வேயணைந்து வொருபுறம தாகவந்த
மலைமகள்கு மாரதுங்க வடிவேலா
பவனிவர வேயுகந்து மயிலின்மிசை யேதிகழ்ந்து
படியதிர வேநடந்த கழல்வீரா
பரமபத மாயசெந்தில் முருகனென வேயுகந்து
பழநிமலை மேலமர்ந்த பெருமாளே.

4-வது படைவீடு.—**திருவேரகம் (சுவாமிமலை)**

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக**திரு வேரகத்தின்** முருகோனே.

5-வது படைவீடு.—**குன்றுதோறாடல் (திருத்தணிகை)**

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி யதனாடே

நெடுநாளு முழைப்புள தாகி
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினைவால்நி னடித்தொழில் பேணி துதியாமல்

தலையான வுடற்பிணி யூறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்திய மாகி தடுமாறித்

தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திட வேநி னருள்தாராய்

கலியாண சுபுத்திர ஞக
குறமாது தனக்கு விநோத
கவிஞரு புயத்திலு லாவி விளையாடிக்

களிகூரு முனைத்துணை தேடு
மடியேனை சுகப்படவேவை
கடஞகு மிதுக்கன மாகு முருகோனே

பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே

பதியான **திருத்தணி** மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வயித்திய நாத பெருமாளே.

## 6-வது படை வீடு.—**பழமுதிர்சோலை**

வாதினை யடர்ந்த வேல் விழியர் தங்கள்
மாயம தொழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே
ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானில மலைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே

சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
**சோலைமலை** நின்ற பெருமாளே.

**கந்தரலங்காரம்**

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடிவாய்வந்தென் னுள்ளங்குளிரக்குதிகொண்டவே.

செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் ததிர்நிற்பனே.

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே.

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனேமயி லேறிய மாணிக்கமே.

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே

விழிக்குத் துணைதிருமென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை
குன்று
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் 'முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

## கந்தரநுபூதி

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள் சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லா மற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ் சரனே.

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்று நினைந்திலையே
வேதாகம ஞான விநோதமனோ
தீதா சுரலோக சிகாமணியே.

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

எந்தாயு மெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

## தீபாராதனையின் போது (திருப்புகழ்)

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளானே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (திருவாசகம்)

## முடிவில் (திருப்புகழ்)

நிருத ரார்க்கொரு காலா ஜேஜெய
சுரர்க ளேத்திடு வேலா ஜேஜெய
நிமல னார்க்கொரு பாலா ஜேஜெய விறலான
நெடிய வேற்படை யானே ஜேஜெய
எனஇ ராப்பகல் தானே நான்மிக
நினது தாட்டொழு மாறே தானினி யுடனேதான்
தரையி னாழ்த்திரை யேழே போலெழு
பிறவி மாக்கட லூடே நானுறு
சவலை தீர்த்துன தாளே சூடியு னடியார்வாழ்
சபையி னேற்றியின் ஞான போதமு
மருளி யாட்கொளு மாறே தானது
தமிய னேற்குமு னேநீ மேவுவ தொருநாளே
தருவி னாட்டர சாள்வான் வேணுவி
னுருவ மாய்ப்பல நாளே தானுறு
தவசி னாற்சிவ னீபோய் வானவர் சிறைதீரச்

சகல லோக்கிய மேதா ளூறு
மசுர பார்த்திப ஞேடே சேயவர்
தமரை வேற்கொடு நீரு யேபட விழமோதென்
றருள ஏற்றம ரோடே போயவ
ருறைய மாக்கிரி யோடே தானையு
மழிய வீழ்த்தெதிர் சூரோ டேயம ரடலாகி
அமரில் வீட்டியும் வானோர் தானுறு
சிறையை மீட்டர ஞர்பால் மேவிய
அதிப ராக்ரம வீரா வானவர் பெருமாளே.

**அடைக்கலம்**

மைவருங்கண்டத்தர்மைந்தகந்தாவென்றுவாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும் [போய்ப்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.
(கந்தரலங்காரம்)

செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
அழுக்குமனத் தடியே னுடையாயுன் அடைக்கலமே.
(திருவாசகம்)

**வாழ்த்து**

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியா ரெல்லாம்.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக அறங்க ளின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

[வழிபாட்டின் இறுதியில் வழிபடு திருவுருவை மனதில் வைத்து மூலமந்திரத்தைச் சிந்தித்த வண்ணம் சில நிமிடம் மௌனத் தியானம் செய்தல் வேண்டும். பின்னர் ஞாயிறு வணக்கம் செய்தல் வேண்டும்.]

## ஞாயிறு வணக்கம்

விண்ணுறு சுடரே! யென்னுள் விளங்கியவிளக்கேபோற்றி
கண்ணுறு மணியே யென்னைக்கலந்தநற் களிப்பேபோற்றி
பண்ணுறு பயனே யென்னைப்பணிவித்தமணியேபோற்றி
எண்ணுறு மடியார் தங்கட் கினியதெள் ளமுதே போற்றி.

(அருட்பா)

## உணவருந்தும்போது

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. (தேவாரம்)

ஊர்தரு வார்நல்ல வூண்தரு வாருடை யுந்தருவார்
பார்தரு வாருமற் கோர்தரு வார்பொன் பணந்தருவார்
சோர்தரு வாருள் ளறிவுகெ டாமற் சுகிப்பதற்கிங்
கார்தரு வாரம்மை யார்தரு பாகனை யன்றிநெஞ்சே

(அருட்பா)

"அருமறைகளே நினைந்து மநுநெறியிலே நடந்து
அறிவை யறிவா லறிந்து நிறைவாகி
அகில புவனுதி யெங்கும் வெளியுற மெய்ஞ்ஞான இன்ப
அமுதை யொழியாதருந்த அருள்வாயே"

## மாலை தீபதரிசனத்தின்போது

"தீபமங்கள ஜோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்"

# திருக்கோயில் வழிபாட்டுப் பாடல்கள்

## திருக்கோபுர வணக்கம்

"கோழி சிலம்ப நலம்பயின்றக
லாப நடஞ்செய மஞ்சுதங்கிய
கோபுர மெங்கும் விளங்கு மங்கல வயலூரா"

(திருப்புகழ்)

### திருக்கொடி வணக்கம்

நாடாக் கொடிய மனமடக்கி நல்ல மனத்தைக் கனிவித்துப்
பாடாப் பிழையைப் பொறுத் தெனக்கும் பதமீந் தாண்ட
[பதிக்கொடியே!
தேடாக் கரும சித்தியெல்லாந் திகழத் தயவாற் றெரிவித்த
கோடாக் கொடியே சிவதருமக் கொடியே வடியேற் கருளுகவே
(அருட்பா)

### பலிபீட வணக்கம்

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன் கர்ம
துஷ்ட தேவதைகளில்லை
துரியநிறை சாந்த தேவதையாம் உனக்கே
தொழும்பன் அன் பபிஷேகநீர்
உள்ளுறையி லென்னுவி நைவேத்தியம் ப்ராணன்
ஓங்குமதி தூப தீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையா
ஒப்புவித் தேன்கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளன் அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்ல உறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணு கரக்கடவுளே. (தாயுமானர்)

### திருநந்திதேவர் வணக்கம்

வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற் றாக்கி
அந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்
(திருவிளையாடற் புராணம்)

### விநாயகர் வணக்கம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
**ஆவினன்குடி** வாழ்வான தேவர்கள் பெருமாளே.
(திருப்புகழ்)

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.
(கந்தரலங்காரம்)

ஊழுக் காளாகி யுறுபோகமே கருதிப்
பாழுக் குழைத்த படிறேனை—யேழுக்குட்
போகா வகைபுரிவாய் போரூரா பன்னிரண்டு
வாகா வடிவேல வா. (போரூர்சந்நிதிமுறை)

## தெய்வயானை யம்மையார் வணக்கம்

சங்கரிதன் மருமகளைச் சங்கரிதன் மகளைச் சங்கரிக்குஞ்
சங்கரனை மாமனெனுந் தையலை

வெங்கரிதந் திடுபிடியை விண்ணவர்கோன் சுதையை
விண்ணவர்கள்
பணிந்தேத்தும் விண்ணுலகத் தணங்கைப்
பைங்கழுநீர் விழியாளைப்பைங்கழுநீர்நிறமேபடைத்தாளைப்
பைங்கழுநீர் செங்கரங் கொண்டாளைச்
செங்கமலை தருமமுதைக் கந்தரிடத்தமருந் தெய்வ
யானையைத் தொழுது திருவருள் பெற்றிடுவாம்.

## வள்ளியம்மையார் வணக்கம்

மாதவனோர் மாதவனாய் மாதவஞ்செய்திடலும் வனமானாய்
வந்தெதிர்ந்த மலர்மானைப் புணரப்
பூதலமங் கையருருவாய் அவதரித்து வள்ளிப் பொருப்புறையும்
பொருப்பர்மனை விருப்பமுடன் வளர்ந்து
தீதகலும் தினைகாத்து வேங்கையுருவெடுத்த செவ்வேளை
யவ்வேளைச் சேர்ந்திருகைக் கோளுங்
காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமருங் கன்னியெனும்
வள்ளிகழ லுன்னி வழுத் திடுவாம்.
(திருத்தணிகைப் புராணச்சுருக்கம்)

## வேல் வணக்கம்

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை. (நக்கீரர்)

வெங்காள கண்டர்கைச் சூலமுந் திருமாயன்
வெற்றிபெறு சுடராழியும்
விபுதர்பதி குலிசமுஞ் சூரன் குலங்கல்லி
வெல்லா வெனக்கருதியே
சங்க்ராம நீசயித் தருளெனத் தேவருஞ்
சதுர்முகனு நின்றிரப்பச்
சயிலமொடு சூரனுட லொருநொடியி லுருவியே
தனியாண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி யிந்த்ராணி
கௌமாரி கமலாசனக்
கன்னிநா ரணிகுமரி த்ரிபுரபயி ரவியமலை
கௌரிகா மாட்சிசைவ

சிங்காரி யாமளை பவானிகார்த் திகைகொற்றி
த்ரியம்பகி யளித்தசெல்வச்
சிறுவனறு முகன்முருக னிருதர்கள்கு லாந்தகன்
செம்பொற்றிருக் கைவேலே. (வேல்விருத்தம்)

## மயில் வணக்கம்

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவி லுலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாபமயிலாம்
மந்தா கினிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கல்ய தந்துரட்சாபரண
இகல்வேல் விநோதனருள்கூ
ரிமையகிரி குமரிமக னேறுநீ லக்ரீவ
ரத்னக் கலாப மயிலே. (மயில் விருத்தம்)

## திருஞானசம்பந்தர் வணக்கம்

பரசமய கோளரியைப் பாலறுவாயனைப்பூம் பழனஞ்சூழ்ந்த
சிரபுரத்துத்திருஞானசம்பந்தப்பெருமானைத்தேயமெல்லாங்
குரவையிடத்தமிழ்வேதம் விரித்தருளுங்கவுணியர்தங்குலதீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ இளங்களிற்றை
விரும்பி வாழ்வாம்.

## திருநாவுக்கரசர் வணக்கம்

இடையறுப்பேரன்புமழைவாருமிணைவிழியுமுழவாரத்திண்
படையறுத் திருக்கரமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறுப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடற்
றொடையறுச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந்
துதித்துவாழ்வாம்.

### சுந்தரர் வணக்கம்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக்கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமாளென்றுந்
திருமணக் கோலப்பெருமாள் மறைப்பெருமா
ளெமதுகுல தெய்வமாமால்.

### மாணிக்கவாசகர் வணக்கம்

பெருந் துறையிற் சிவபெருமா னருளுதலும்
பெருங்கருணைப் பெற்றிநோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி.

### அறுபத்துமூவர் வணக்கம்

தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்துமூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் றுளிணை சேரறு
பத்துமூவர் பதமலர் போற்றுவாம்.

(காஞ்சிப்புராணம்)

### சேக்கிழார் வணக்கம்

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடி போற்றி.

(உமாபதிசிவம்)

### அருணகிரிநாதர் வணக்கம்

விருப்புடன் உபய சரணமென் மலரை
வேண்டுவார் வேண்டிய தளிக்கும்

பொருப்புகள் தோறு நின்றருள் ஒருவன்
புகழினை அகநெகப் புகன்று
கருப்புகுதாத கதிதனைக் காட்டுங்
கலையுணர் புலவர்கள் திலகம்
திருப்புகழ் அருணகிரியெம தடிகள்
திருவடி குருவடி வாமே.

## அம்பிகை வணக்கம்

பணியேன் நின்னைப் பணியுமவர்பதமும் பணியேன் நினதுபுகழ்
பரவியறியேன்பலநாளும் பாழுக்கிறைத்தேன்பவப்பிணியைத்
தணியேன் நினது திருவருளைச் சாருநாளென் றேவென்று
தவியேன் வயிற்றை நிரப்புதற்கே தவிக்கின்றேன்தீ வினைக்
கொடியேன்
துணியேன் தீராத்துயரமதில் துள்ளித்துடித்துத் துவள்கின்றேன்
தூயசோம சுந்தரத்தின் துணையே பிணையே சிவஞான
மணியே அணியார் மதுரைவளர் மயிலே வருக வருகவே
மறைகள் பரவும் அங்கயற்கண் மணியே வருக வருகவே.
(கிருபானந்தவாரி)

ஆருந்துயரத் தழுந்துகின் றேனையிங் கஞ்சலென்றே
கூறுக் குறையென் குறையே யினிநின் குறிப்பறியேன்
தேருச் சிறியர்க் கரிதாந் திருவொற்றித் தேவர் மகிழ்
மாருக் கருணை மழையே! வடிவுடை மாணிக்கமே!

(அருட்பா)

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்க ணெம் பிராட்டி
அரும்புமிள நகை போற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி. (திருவிளையாடல்)

## திருமால் வணக்கம்

வேதநூல் பிராயம்நூறு மனிதர்தாம் புகுவரேலும்
பாதியு முறங்கிப்போகும் நின்றதில் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டே னரங்கமா நகருளானே.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

(நாலாயிரம்)

மண்ணாளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர் போற் பற்றடைந்து மாளவேண்டேன்
விண்ணாளா நின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் றிருவருளே வேண்டிநின்றேன்
புண்ணாளா நின்றமன முடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்
கண்ணாளா சுடர்க்கமலக் கண்ணா என்னைக்
கைவிடிலென் செய்வேனே கடைய னேனே.

(அருட்பா)

## திருமகள் வணக்கம்

உலகம் புரக்கும் பெருமான்றன் உளத்தும்புயத்தும்அமர்ந்தருளி
உவகை யளிக்கும் பேரின்ப வுருவேயெல்லாம்உடையாளே
திலகஞ் செறிவா ணுதற்கரும்பே தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டாதன்பர்உளத்துள்ளேதித்தித்தெழுமோர்தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற்கருளளித்த வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவேஞானமணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணைபொழி தடங்கண் திருவே கண்ணமங்
தாயே சரணஞ் சரணமிது தருணங் கருணை தருவாயே.[கைத்

(அருட்பா)

## கலைமகள் வணக்கம்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். (கம்பர்)

சொல் விற்பனமு மவதானமுங் கவிசொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலா வல்லியே.

(குமரகுருபரர்)

சங்கம் வளர்ந் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச்
சரச்சுவதி தன்னை யன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி யுணர்வளிக்குங்
கலைஞானத் தோகை தன்னைத்
திங்கணுதற் றிருவையருட் குருவைமலை
ரோங்கியபெண் தெய்வந் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத்
தொழுதுபுகழ் சாற்று கிற்பாம். (அருட்பா)

**சண்டேசுரர் வணக்கம்**

மனுதிகளுக் கெட்டாத பரமானந்த வாழ்வினை
அங்கோ ரிலிங்கம் மணலாற் குவித்
தனுதிதயன் தனிநின்றுந் தாபித்தான் பாலழைத்த அன்பா
லாட்ட வந்து தடுக்கத் தானத்
எனுதவன்தன் இருபதமும் மழுவால் துண்டித்திகழ்ந்தவனைப்
பரபதத்துள் இருத்தித் தானும்
பிணுகியரு ளடைந்தவிறல் சண்டேசன் தாள் பிரசமலர்
இறைத் திறைஞ்சிப் பரசுவாமே. (சேதுபுராணம்)

---

# கூட்டு வழிபாட்டுப் பாடல்கள்

**விநாயகர் வணக்கம்**

பெரும்பொருட் கிடனும் பிரணவ வடிவிற்
பிறங்கிய வொருதனிப் பேறே
அரும்பொரு ளாகி மறைமுடிக் கண்ணே
அமர்ந்த பேரானந்த நிறைவே
தரும்பர போக சித்தியுஞ் சுத்த
தருமமு முத்தியுஞ் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (அருட்பா)

**சிவபெருமான் வணக்கம்**

தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லார் இசைபாட விம்மி
அழுமா றுவல்லார் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம் மன்னினையே.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

(சம்பந்தர்)

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை
அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு வான்புலன்கள்
அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப் பொதுநீக்கித்
தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

பொய்யினைத் தவிர விட்டுப் புறமலா அடிமைசெய்ய
ஐயநீ அருளிச் செய்யாய் ஆதியே ஆதிமூர்த்தி
வையகந் தன்னில் மிக்க மல்குசிற்றம்ப லத்தே
பையநின் றாடல் காண்பான் பரமநான் வந்தவாறே.

குனித்தபுருவமுங்கொவ்வைச் செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே.

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற உணர்வாகிப்
பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து நல்லனவும்
தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றியூராய் திருவானைக்
காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால் அல்ல
கண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருந்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

தொண்டனேன் பிறந்து வாளா தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நைந்து பேர்வதோர் வழியுங் காணேன்
அண்டனே அண்டவாணா அறிவனே அஞ்ச லென்னாய்
தெண்டிரைப் பழனஞ் சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்துளானே.

(நாவுக்கரசர்)

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தைநீ எனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்அடியான் என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூர் உளானே.

கார்க்குன் றமழை யாய்ப்பொழி வானைக்
கலைக்கெலாம் பொருளாய் உடன் கூடிப்
பார்க்கின் றஉயிர்க் குப்பரிந் தானைப்
பகலுங் கங்குலும் ஆகிநின் றானை
ஓர்க்கின்ற செவியைச் சுவை தன்னை
உணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை
ஆரூரானை மறக்கலு மாமே.

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருள்இலை நாளும்
என்னெ னக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை அருளாய்
இடைமரு துறை எந்தைபி ரானே. (சுந்தரர்)

(சிவபுராணம் முழுவதும் சொல்லவும்)

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்துபோன காலங்கள் புகுந்து நின்ற திடர் பின்னல்
உலர்ந்து போனேன் உடையானே உலவாவின்பச்
சுடர்காண்பான்
அலந்துபோனேன் அருள்செய்யாய் ஆர்வங்கூர அடியேற்கே.

புகழ்மின்தொழுமின்பூப்புனைமின்புயங்கன் தாளேபுந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழு மடியார்முன் சென்று நெஞ்சம் உருகி நிற்போமே.

அன்றே யென்ற னாவியும் உடலு முடைமை யெல்லாமும்
குன்றே யனையா என்னையாட் கொண்டபோதேகொண்டிலையோ
இன்றோரிடையூறெனக்குண்டோ எண்டோள்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய் பிழை செய்வாய்நானோ இதற்குநாயகமே.

நாயிற்கடையாம் நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி
ஆயக்கடவே னானோதான் என்னதோவிங் கதிகாரம்
காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய்கண்ணுதலே.

செம்மை நலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கிநாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.
(மணிவாசகர்)

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயு மிளைப்பாறப்—பண்ணுமயன்
கையாறவு மடியேன் காலாறவுங் கண்பார்
ஐயா திருவையா றா. (பட்டினத்தார்)

அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவே என் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி

விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரிஎன எனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனி யான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும் உனை
இடைவிட்டு நின்ற துண்டோ
என்றுநீ யன்றுநான் உன்னடிமை யல்லவோ
யாதேனும் அறியா வெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமேபரஞ்
சோதியே! சுகவாரியே.

நேற்றுளார் இன்று மாளா நின்றனர் அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ!போக்கினேன்வீணேகாலம்
ஆற்றிலேன் அகண்டா னந்த அண்ணலே! அளவில்மாயைச்
சேற்றிலே இன்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே.

மாறு அநுபூதி வாய்க்கின் அல்லால் என்மயக்கந்
தேறுதென் செய்வேன் சிவமே பராபரமே.

தாகமறிந் தின்பநிட்டை தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடின்என் செய்வேன் பராபரமே.

(தாயுமானர்)

அச்சாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெல்லா மறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பு மாகியுயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லா மின்புதரல்வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுஞ்சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி யந்தமிலாத் திருவடியில் யானும்
உடையாயுங் கலந்தோங்கு மொருமையும் வேண்டுவனே.

என்பிழை யனைத்தும் பொறுத்தருள் புரிந்தென்
னிதயத்தி லிருக்கின்ற குருவே
அன்புடை யரசே யப்பனே யென்ற
னம்மையே யருட்பெருஞ்சோதி

இன்புறு நிலையி லேற்றிய துணையே
யென்னுயிர் நாதனே யென்னைப்
பொன்புனை மாலை புனைந்தவோர் பதியே
பொது நடம் புரிகின்ற பொருளே.

வாதுபேசிய மனிதர் காளொரு
வார்த்தை கேண்மின்கள் வந்துநும்
போது போவதன் முன்ன ரேயருட்
பொதுவிலேநடம் போற்றுவீர்
தீது பேசினீ ரென்றி டாதுமைத்
திருவுளங்கொளுங் காண்மினோ
சூது பேசிலே னன்மை சொல்கின்றேன்
சுற்ற மென்பது பற்றியே. (அருட்பா)

**போற்றித் திருவகவல்**

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடியாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுரண் ஏன மாகி முன்கலந்
தேழ்தல முருவ இடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகில்
யானை முதலா யெறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானிடப் பிறப்பினுள் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களி னூறலர் பிழைத்தும்
ஏழுதிங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்

ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
பல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறுகோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்றமென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்த மதங்களில்
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்

தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறு அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசய மாகக்
கற்று மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடியிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி

சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
ஐயாபோற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
கைதரவல்ல கடவுள் போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி இருங்கழற்

சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரு ரமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி ப்வனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தே னாயே னடியேன் போற்றி
இலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி

நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி. (திருவாசகம்)

திருச்சிற்றம்பலம்.

### அம்பிகை வணக்கம்

திறைகள்கொணர்ந்து திருமன்னர்திரண்டுசூழக்கொலுவிருக்கும்
தெய்வத்திருவே! தித்திக்குந் தேனாரமுதே திருத்தொண்டர்
குறைக ளகற்றுங்கோமளமே! குறைவில்கருணைகொழிக்குமருட்
குணமே! இனிய குயில்மொழியே! கொஞ்சும் செஞ்சொற்
[குலக்கிளியே!
சிறைகள் இழந்த பறவையெனத் தேம்பு மடியேன் தீவினையைத்
தீர்க்குஞானத்தெள்ளமுதே! செழிக்குந்தமிழின்செங்கரும்பே
மறைகள் பரவு மதுரைவளர் மயிலே! வருக வருகவே
மன்னுபுகழார் அங்கயற்கண் மணியே! வருக வருகவே.

(கிருபானந்தவாரி)

## முருகவேள் வணக்கம்

கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில்வந்துத கன்தக னென்றிடு
கதிர்மிஞ்சிய செண்டை யெறிந்திடு கதியோனே
கடமிஞ்சி யநந்த விதம்புணர்
கவளந்தனை யுண்டு வளர்ந்திடு
கரியின்றுணை யென்று பிறந்திடு முருகோனே
பனகந்துயில் கின்ற திறம்புனை
கடல்முன்பு கடைந்த பரம்பரர்
படரும்புய லென்றவ ரன்புகொள் மருகோனே
பலதுன்ப முழன்று கலங்கிய
சிறியன்புலை யன்கொலை யன்புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே
அனகன்பெயர் நின்றுரு ளுந்திரி
புரமுந்திரி வென்றிட வின்புடன்
அழலுந்தந குந்திறல் கொண்டவர் புதல்வோனே
அடல்வந்து முழங்கி யிடும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
அதிர்கின்றிட அண்ட நெரிந்திட வருசூரர்
மனமுந்தழல் சென்றிட வன்றவ
ருடலுங்குட லுங்கிழி கொண்டிட
மயில் வென்றனில் வந்தரு ளுங்கன பெரியோனே
மதியுங்கதி ருந்தட வும்படி
யுயர்கின்ற வனங்கள் பொருந்திய
வளமொன்று **பரங்கிரி** வந்தருள் பெருமாளே.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ
மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா

மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா
அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சு
மடியா ரிடைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே.

உலகபசு பாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்ற னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை யணிசேயே
சரவணப வாமு குந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
பழநிமலை வாழ வந்த பெருமாளே.

காமியத் தழுந்தி யிளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்த மருள்வாயே
தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேனவ் வத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென்
றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவ
ரேச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்
பாதம் வைத்திடை யாத ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனோடிப்
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ

ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
யோட வெட்டிய பாநு சத்திகை எங்கள்கோவே
ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்த்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே.

அல்லிவிழி யாலு முல்லைநகை யாலு
மல்லல்பட ஆசைக் கடலீயும்
அள்ளவினி தாகி நள்ளிரவு போலு
முள்ளவினை யாரத் தனமாரும்
இல்லுமிளை யோரு மெல்லஅய லாக
வல்லெருமை மாயச் சமனாரும்
எள்ளியென தாவி கொள்ளைகொளு நாளி
லுய்யவொரு நீபொற் கழல்தாராய்
தொல்லைமறை தேடி யில்லையெனு நாதர்
சொல்லுமுப தேசக் குருநாதா
துள்ளிவிளை யாடு புள்ளியுழை நாண
வெள்ளிவன மீதுற் றுறைவோனே
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே.
(திருப்புகழ்)

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப்பார் மரிப்பார் வெறுங் கர்மிகளே.

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டுமேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே.

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யாரென்செய்வார்யமதூ தருக்கே.

சிந்திக் கிலேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேனொன் றும் வாழ்த்துகிலேன்மயில்வாகனனைச்
சந்திக் கிலேன் பொய்யை நிந்திக்கிலே னுண்மை
சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே.

கோடாதவேதனுக்கியான் செய்தகுற்றமென்குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக்குமர நின்றண்டை யந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

— (அலங்காரம்)

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாடணனே.

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே

தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே.

தாசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந் ததுவே.

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

(கந்தரநுபூதி)

குறைகளையுங் கோவே குணமளிக்குந் தேவே
மறைமுடிவு காட்டு மணியே—யிறையவனே
போரூரா வென்று புகழ்நெஞ்சே யெந்நாளுங்
காரூர் மயக்கறுக்குங் காண். (போரூர் சந்நிதிமுறை)

வெம்பு முயிருக் கோருறவாய் வேளை நமனும் வருவானேல்
தம்பி தமயன் துணையாமோ தனயர் மனைவி வருவாரோ
உம்பர் பரவுந் திருத்தணிகை உயர்மா மலைமேல் இருப்பவர்க்குத்
தும்பைக் குடலை யெடுக்காமல் துக்கவுடலை யெடுத்தேனே.

தொல்லைக்குடும்பத்துயரதினில்தொலைந்தேனந்தோ! காலமெலாம்
அல்ல லகற்றிப் பெரியோரையடுத்துமறியேன்அரும்பாவி
செல்வத் தணிகைத் திருமலைவாழ் தேவா வுன்றன் சந்நிதிக்கு
வில்வக் குடலை யெடுக்காமல் வீணுக்குடலை யெடுத்தேனே.

அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் அதில் நினை
கவலைப்படுவ தன்றிசிவகனியைச்சேரக் கருதுகிலேன் [வாய்க்
திவலையொழிக்குந்திருத்தணிகைத்திருமால்மருகன் திருத்தாட்குக்
குவளைக்குடலையெடுக்காமல்கொழுத்தவுடலை யெடுத்தேனே.

(அருட்பா)

அநந்தமறை யுன்னறிவாய் விளங்கவென
வாறுமுக வடிவே காட்டித்
தனக்குணியா வந்தசிவ சரவணனே
பிரணவனே சாமீ யுன்றன்
மனங்கனிய யானொழுகும் வகையையுணர்ந்
தெனையறியு வரமீந் தென்னைக்
கனம்படவும் வைப்பது நின் கடனேயென்
றனுதினமும் கருதா நின்றேன். (பாம்பனடிகள்)

## திருமால் வணக்கம்

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும்நீள்விசும்பருளுமருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்றதாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா
வென்னும் நாமம்.

தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடி தொடுகடலே
புக்கன்றி புறம் நிற்க மாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில் நிறத்தாய் வித்துவக் கோட்டம்மா! உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன் காண் புண்ணியனே!
(நாலாயிரம்)

மையான நெஞ்சகத்தோர் வாயில் சார்ந்தே
மனந்தளர்ந்தேன் வருந்துகின்ற வருத்த மெல்லாம்
ஐயாவென் உளத்தமர்ந்தாய் நீதான் சற்றும்
அறியாயோ அறியாயேல் அறிவா ரியாரே
பொய்யான தன்மையினேன் எனினு மென்னைப்
புறம் விடுத்தல் அழகேயோ பொருளா எண்ணி
மெய்யாவென் றனையந்நாள் ஆண்டா யிந்நாள்
வெறுத்தனையேல் எங்கேயான் மேவுவேனே.
(அருட்பா)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

உ

முருகா

# திருப்புகழமிர்தம்

(சிறந்த மாத வெளியீடு)

★

ஆசிரியர்:

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

★

ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரு திருப்புகழ்ப் பாடலுக்கு அரிய விரிவான உரையும், பெரிய புராணத்துள் வரும் நாயன்மார்களின் சரிதங்களும் விளக்கமும், ஆண் பெண் இருபாலாரும், சிறப்பாகப் பெண்பாலாரும் படித்து நல்வழி ஒழுக உதவும் கற்பு என்னும் கட்டுரையும், இன்னும் அரிய பல விஷயங்களும் வெளிவருகின்றன. வருட சந்தா ரூபாய் இரண்டுதான். உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

திருப்புகழமிர்தம் காரியாலயம்
144, சாமிநாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.